வடக்கின் முதல் நாளிதழ் - Estd 1959 Reg. No. : P. 1632 விலை ரூ. 30/=

ஈழநாடு
Eelanadu




Email : eelanaduweekly@gmail.com மலர் : 07 04.06.2026 வியாழக்கிழமை இதழ் : 149 பக்கங்கள் : 08

# தமிழரசு கட்சியின் நிலை மேலும் மோசம் அடையும்!

**மூத்த தலைவர் குலநாயகம் சுட்டிக்காட்டு**

யாழ்ப்பாணம், ஜூன். 04

இலங்கைத் தமிழ் அரசுக் கட்சியின் 77 ஆண்டு கால வரலாற்றில் இடம்பெறாத சம்பவங்கள் எல்லாம் இப்போது திணிக்கப்படுகின்றன எனவும், கறையான் புற்றெடுக்கக் கொடிய நாகங்களும், விச யந்துக்களும் குடிகொண்டு சன்னதமாடுகின்ற நிலைபோன்று, கட்சியை அந்த நிலைக்குத் தள்ளிவிட முடியாது எனவும், கட்சியின் மூத்த தலைவர் சேவியர்.குலநாயகம் தெரிவித்துள்ளார். அண்மையில் இடம்பெற்ற கட்சியின் மாவட்ட கிளைக் கூட்டம் தொடர்பில், மத்திய செயற்குழு உறுப்பினர்களுக்கும் சிறப்பு அழைப்பாளர்களுக்கும் எழுதிய கடிதத்தில், அவர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

அதில் அவர் மேலும் தெரிவிக்கையில்-

தமிழ் அரசுக் கட்சியின் யாழ்ப்பாண மாவட்ட கிளைக் கூட்டம், நீண்ட இடைவெளிக்குப் பின்னர், கடந்த 31 ஆம் திகதி பிற்பகல் 4.15 மணியளவில், கட்சி தலைமைச் செயலகத்தில் நடைபெற்றது.

கூட்டத்துக்கான கடிதத்தை மாவட்ட கிளைச் செயலாளர் என்ற வகையில் நான் அனுப்பியிருந்தேன்.

07



## நாகபட்டினத்திலிருந்து பயணிகளுடன் காங்கேசன் வந்தது சிவகங்கை கப்பல்

யாழ்ப்பாணம், ஜூன். 04

நாகபட்டினத்தில் இருந்து பயணித்தை ஆரம்பித்த, சுபம் நிறுவனத்தின் சிவகங்கை கப்பல் நேற்று பகல் காங்கேசன்துறையை வந்தடைந்தது.

நேற்றுக் காலை 7.55 மணியளவில் நாகபட்டினத்தில் இருந்து பயணத்தை ஆரம்பித்த குறித்த கப்பல் பி.ப. 12.55 மணியளவில் காங்கேசன்துறையை வந்தடைந்தது. பின்னர் மீண்டும் 2.30 மணிக்கு காங்கேசன்துறையில் இருந்து பயணத்தை ஆரம்பித்தது.

இதன்போது இந்தியாவில் இருந்து 93 பயணிகள் இலங்கைக்கு வந்ததுடன், 79 பயணிகள் இலங்கையில் இருந்து இந்தியாவை நோக்கிப் பயணித்தனர்.

குறித்த கப்பல் சேவை சில வாரங்களுக்கு

07

## பொன் சிவகுமாரன் நினைவேந்தல் தவிசாளர் விசாரணைக்கு அழைப்பு

யாழ்ப்பாணம், ஜூன். 04

பொன் சிவகுமாரனின் நினைவேந்தல் நிகழ்வு ஏற்பாடு செய்தமை தொடர்பில் வலிகாமம் கிழக்கு பிரதேச சபையின் தவிசாளர் தியாகராஜா நிரோஷ் பொலிஸ் விசாரணைக்கு அழைக்கப்பட்டுள்ளார்.

தமிழ் மக்களின் விடுதலைக்காக முதல் வித்தாக தன்னுயிரை ஆகுதியாக்கிய பொன் சிவகுமாரனின் 52 ஆவது நினைவேந்தல் உரும்பிராயில் உள்ள திருவுருவச் சிலையில் வழமைபோன்று நாளை வெள்ளிக்கிழமை காலை 8 மணிக்கு வலிகாமம் கிழக்கு பிரதேச சபையினால் உத்தியோகபூர்வமாக ஏற்பாடு

07



## கோட்டாவுக்கு பயணத் தடை!

கொழும்பு, ஜூன். 04

முன்னாள் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ மற்றும் இரண்டு இராணுவ அதிகாரிகளுக்கு கொழும்பு கோட்டை நீதவான் பாசன் அமரசேன வெளிநாட்டுப் பயணத் தடை

07

## காங்கேசன் துறைமுகத்துக்கு இந்தியத் தூதுவர் திடீர் விஜயம்



யாழ்ப்பாணம், ஜூன். 04

இந்திய தூதுவர் சந்தோஷ் ஜா நேற்று காங்கேசன் துறைமுகத்துக்கு விஜயம் செய்தார்.

இவ்வாறு விஜயம் செய்த இந்திய தூதுவர்

07

## சூரியசக்தி மின் நிலையத்தை பார்க்க நெடுந்தீவு சென்றார் இந்தியத் தூதுவர்



யாழ்ப்பாணம், ஜூன். 04

யாழ்ப்பாணத்துக்கு உத்தியோக பூர்வ விஜயமொன்றை மேற்கொண்டுள்ள இலங்கைக்கான இந்தியத் தூதுவர் சந்தோஷ் ஜா, நேற்று நெடுந்தீவுக்கு சென்றார்.

நெடுந்தீவில் முன்னெடுக்கப்பட்டுவரும் இந்திய உதவியுடனான சூரியசக்தி மின் நிலையத்தை நேரில் சென்று

07

## சீனா, இந்தியாவுடன் சேர்த்து இலங்கைக்கும் 12.5 வீத கூடுதல் வரி விதிக்குமாறு பரிந்துரை!

கொழும்பு, ஜூன். 04

கட்டாய உழைப்பு மூலம் தயாரிக்கப்படும் பொருள்களின் இறக்குமதியைத் தடை செய்யவும், அதனை நடைமுறைப்படுத்தவு தவறிய குற்றச்சாட்டில், இலங்கை உள்ளிட்ட 60 நாடுகளின் இறக்குமதிப் பொருள்களுக்கு கூடுதல் வரிகளை விதிக்க அமெரிக்க வர்த்தகப் பிரதிநிதி அலுவலகம் பரிந்துரைத்துள்ளது.

சீனா, இந்தியா மற்றும் தென் கொரியாவுடன் இலங்கையும் 12.5 வீதம் என்ற உயர்வான வரி விதிப்புக்கு முன்மொழியப்பட்ட நாடுகளில் அடங்கும்.

அதேசமயம் பங்களாதேஷ் மற்றும் கம்போடியா ஆகியவை 10 வீதம் என்ற குறைந்த விகிதத்திற்கு முன்மொழியப்பட்ட நாடுகளில் அடங்கும்.

(அ)

## பின்னால் வந்த கார் மோதித் தள்ளியதில் வீதியில் நடந்து சென்ற 2 இளைஞர்கள் பலி!

**வவுனியாவில் அதிகாலை துயரச் சம்பவம்**

வவுனியா, ஜூன். 04

வவுனியா, கனகராயன்குளம் பகுதியில் ஏ-9 பிரதான வீதியில் நேற்று அதிகாலை இடம்பெற்ற வாகன விபத்தில் இரண்டு இளைஞர்கள் சம்பவ இடத்திலேயே பரிதாபமாக உயிரிழந்துள்ளனர்.

வவுனியா-யாழ்ப்பாணம் ஏ-9 வீதியில் கனகராயன்குளம் பெரியகுளம் பகுதிக்கு அருகில் பாதசாரிகளாக நடந்து சென்று கொண்டிருந்த இரண்டு இளைஞர்களை, அதே திசையில் வேகமாக வந்த கார் ஒன்று மோதித் தள்ளியுள்ளது.

மோதிய வேகத்தில் தூக்கி வீசப்பட்ட இரு இளைஞர்களும், படுகாயமடைந்த நிலையில் சம்பவ இடத்திலேயே உயிரிழந்துள்ளதாக தகவல்கள்

07

## நாணய நிதியத்திடம் இருந்து இலங்கைக்கு 695 மில்லியன் டொலர்கள் நிதி கிடைத்தது!

கொழும்பு, ஜூன். 04

சர்வதேச நாணய நிதியத்தினால் இலங்கைக்கு அங்கீகரிக்கப்பட்ட 5 ஆம் மற்றும் 6 ஆம் தவணைகளுக்கான 695 மில்லியன் அமெரிக்க டொலர் நிதியுதவி நாட்டுக்குக் கிடைத்துள்ளதாக உத்தியோகபூர்வமாக அறிவிக்கப்பட்டுள்ளது.

இலங்கை அரசாங்கம் முன்னெடுத்து வரும் பொருளாதார சீர்திருத்தங்களின் முன்னேற்றத்தை அடுத்தே இந்த இரு தவணைகளுக்கான நிதியும் ஒரே கட்டமாக விடுவிக்கப்பட்டுள்ளது.

மத்திய வங்கியின் தகவல்களின்படி, தற்போது கிடைக்கப்பெற்றுள்ள இந்த பெருந்தொகை நிதியானது நாட்டின் வெளிநாட்டு நாணயக் கையிருப்பில் நேரடியாகச் சேர்க்கப்பட்டுள்ளது.

கடந்த கால பொருளாதார நெருக்கடிகளில் இருந்து மீண்டு வரும் இலங்கையின் நிதி

07



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# டிஜிற்றல் தொழில்நுட்ப வளர்ச்சியால் நிதி மோசடி அச்சுறுத்தல் அதிகரிப்பு!

## மத்திய வங்கி ஆளுநர் எச்சரிக்கை



கொழும்பு, ஜூன். 04

இலங்கையில் டிஜிற்றல் தொழில்நுட்பத்தின் அதிவேக வளர்ச்சியோடு நிதி மோசடிகளுக்கான அச்சுறுத்தல்களும் அதிகரித்துள்ளதாக மத்திய வங்கியின் ஆளுநர் கலாநிதி நந்தலால் வீரசிங்க எச்சரித்துள்ளார்

நிதி நுகர்வோரைப் பாதுகாக்கும் நோக்கில், "ஏமாறாமல் இருப்போம்" என்ற தொனிப் பொருளில் ஆரம்பிக்கப்பட்டுள்ள நிதி நுகர்வோர் பாதுகாப்பு மாதத்தை முன்னிட்டு கொழும்பில் நடைபெற்ற விசேட நிகழ்வில் கலந்துகொண்டு உரையாற்றிய போதே அவர் இந்த எச்சரிக்கையை விடுத்துள்ளார்.

டிஜிற்றல் வங்கிச் சேவைகளின் விரிவாக்கம் காரணமாக ஒட்டுமொத்த வங்கிச் சேவைகளும் மக்களின் கைகளுக்குள் வந்துள்ளபோதிலும், முறையான நிதி அறிவு இல்லாமை மற்றும் நம்பகமான நிதித் தகவல்கள் கிராமப்புற மக்களைச் சென்றடையாமை போன்ற காரணங்களால் பொதுமக்கள் ஏமாற்றப்படுவதாக அவர் சுட்டிக்காட்டியுள்ளார்

அனுமதிப்பத்திரம் பெற்ற நிதி நிறுவனங்களுக்கும், சட்டவிரோத நிதி நிறுவனங்களுக்கும் இடையிலான வேறுபாட்டை அறியாத சாதாரண மக்கள் ஒருபுறமும், இணையத்தைப் பயன்படுத்தத் தெரிந்தும் தங்களின் ரகசிய இலக்கங்கள் மற்றும் ஒரு முறை மட்டும் பயன்படுத்தும் ஓ.ரி.பி. குறியீடுகளை மோசடிக்காரர்களுடன் பகிர்ந்துகொள்ளும் படித்த மக்கள் மறுபுறமும் ஏமாற்றமடைந்து வருவதாக அவர் கவலை வெளியிட்டுள்ளார்.

பிரமிட் திட்டங்கள், சட்டவிரோத வைப்புத்தொகை சேகரிப்புகள் போன்ற நிதி மோசடிகள் தனிநபர்களை மட்டுமன்றி, ஒட்டுமொத்த சமூகத்தின் பொருளாதாரத்தையும், வறுமை ஒழிப்புக்கான முயற்சிகளையும் பல ஆண்டுகள் பின்னோக்கித் தள்ளிவிடும் என்றும், இதனால் சந்தேகத்திற்குரிய வாக்குறுதிகளை மக்கள் நம்ப வேண்டாம் என்றும் மத்திய வங்கி ஆளுநர் அவசர வேண்டுகோள் விடுத்துள்ளார்.

# யாழில் தரமற்ற உப்பு விற்பனை; இருவருக்கு ஒன்றரை வருட சிறை

யாழ்ப்பாணம், ஜூன். 04

யாழ்ப்பாணத்தில் அமைந்துள்ள பல்பொருள் அங்காடி ஒன்றில் தரமற்ற உப்பினை விற்பனை செய்தமை உள்ளிட்ட குற்றங்களுக்காக பல்பொருள் அங்காடி மற்றும் உப்பு உற்பத்தி நிறுவன முகாமையாளர் ஆகியோருக்கு ஒன்றரை வருட சிறைத் தண்டனை விதித்துள்ள நீதிமன்று, 18 ஆயிரம் ரூபா தண்டமும் விதித்துள்ளது.

கோப்பாய் பகுதியில் உள்ள பல்பொருள் அங்காடி ஒன்றில் பொது சுகாதாரப் பரிசோதகர் மேற்கொண்ட திடீர் பரிசோதனை நடவடிக்கையின்போது தரமற்ற உப்பு விற்பனைக்கு வைத்திருந்தமை கண்டறியப்பட்டுள்ளது.

அதனை கைப்பற்றிய சுகாதார பரிசோதகர், நீதிமன்ற அனுமதியுடன் உப்பின் மாதிரியை கடந்த பெப்ரவரி மாதம் 18ஆம் திகதி அரச இராசயன பகுப்பாய்வுக்கு அனுப்பி அறிக்கை கோரி இருந்தார்.

உப்பு தரமற்றது என அறிக்கை கிடைக்கப்பெற்றதை அடுத்து, பல்பொருள் அங்காடி முகாமையாளர் மற்றும் உப்பு உற்பத்தி நிலைய முகாமையாளர் ஆகியோருக்கு எதிராக தனித்தனியாக மூன்று குற்றச்சாட்டுக்களின் கீழ் பொது சுகாதர பரிசோதகர் யாழ்ப்பாண மேலதிக நீதவான் நீதிமன்றில் வழக்கு தொடர்ந்தார்.

வழக்கு விசாரணை நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை விசாரணைக்கு எடுத்து கொள்ளப்பட்டபோது இருவரும் தம் மீதான குற்றச்சாட்டுக்களை ஏற்றுக்கொண்டனர்.

அதனை அடுத்து ஒவ்வொரு குற்றத்திற்கு 6 ஆயிரம் ரூபாய் வீதம் மூன்று குற்றச்சாட்டுக்கு 18 ஆயிரம் ரூபாய் தண்டம் விதித்த நீதிமன்று , ஒவ்வொரு குற்றச்சாட்டுக்கு 06 மாத காலச் சிறைத்தண்டனை விதித்ததன் அடிப்படையில் ஒன்றரை வருட சிறைத்தண்டனை விதிக்கப்பட்டது. மூன்று குற்றங்களுக்கான சிறை தண்டனையை ஏக காலத்தில் அனுபவிக்க மன்று கட்டளையிட்டது.

(அ)

# வயதுக்கு ஏற்ற வகையிலான பாலியல் கல்வி பாடத்திட்டம்

## அரசாங்கம் உறுதி

கொழும்பு, ஜூன். 04

இலங்கையில் எதிர்வரும் 2027ஆம் ஆண்டு அறிமுகப்படுத்தப்படவுள்ள புதிய பாடத்திட்ட சீர்திருத்தங்களின் ஊடாக, வயதுக்கு ஏற்ற வகையிலான பாலியல் கல்வியை பாடத்திட்டத்தில் இணைத்துக்கொள்ள அரசாங்கம் உறுதியளித்துள்ளதாக அமைச்சரவைப் பேச்சாளரும் சுகாதார மற்றும் ஊடகத் துறை அமைச்சர் நளிந்த ஜயதிஸ்ஸ தெரிவித்துள்ளார்

கொழும்பில் நடைபெற்ற வாராந்த அமைச்சரவை ஊடக சந்திப்பில் கலந்துகொண்டு கருத்து வெளியிடும் போதே அவர் இந்த விவரத்தைப் பகிர்ந்துள்ளார்.

டிஜிற்றல் கல்வி மற்றும் ஏனைய பாடவிதானங்களுடன் சேர்த்து, மாணவர்களின் வயதுப் பிரிவுகளுக்குப் பொருத்தமான முறையில் இந்த விழிப்புணர்வுக்கல்வி கற்பிக்கப்படும் என அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

எனினும், சிறுவர்களுக்குப் பாலியல் கல்வி வழங்குவது குறித்து மதகுருமார்கள், எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ மற்றும் முன்னாள் அமைச்சர் விமல் வீரவங்ச உள்ளிட்ட தரப்பினர் கடுமையான விமர்சனங்களை முன்வைத்துள்ளதால், இந்த விடயம் மிகவும் எச்சரிக்கையுடன் கையாளப்படவேண்டும் என அமைச்சர் குறிப்பிட்டுள்ளார்.

(அ)

# யாழ்.பல்கலை மாணவர்களுக்கு இந்தியாவின் புலமைப் பரிசிலை வழங்கினார் சந்தோஷ் ஜா



யாழ்ப்பாணம், ஜூன். 04

யாழ்.பல்கலைக்கழக மாணவர்களுக்கு இந்திய அரசின் புலமைப்பரிசில் வழங்கும் நிகழ்வு யாழ்.பல்கலைக்கழகத்தில் நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை இடம்பெற்றது.

யாழ்ப்பாணத்துக்கு விஜயம் செய்த இந்திய தூதுவர் சந்தோஷ் ஜா மாணவர்களின் கற்றலுக்கு நிதி ஆதாரத்தை வழங்கும் நோக்கில் யாழ்ப்பாண பல்கலைக்கழக மாணவர்களுக்கு புலமைப்பரிசிலை உத்தியோகபூர்வமாக வழங்கினார்.

இதன்போது, முதலாம் வருடத்தில் கல்வி கற்கும் அனைத்து பீடங்களையும் சேர்ந்த தெரிவு செய்யப்பட்ட 100 மாணவர்களுக்கான புலமைப்பரிசிலை அவர் வழங்கினார்.

மாதந்தோறும் 8 ஆயிரம் ரூபா வீதம் அவர்களின் பல்கலைக்கழக் கல்வி நடவடிக்கைகள் நிறைவடையும்வரை இத்தொகை வழங்கப்படவுள்ளது.

இந்த நிகழ்வில் யாழ்.பல்கலைக்கழக பதில் துணைவேந்தரும் கலைப்பீட பீடாபதியுமான நாகமுத்து பிரதீபராஜா, யாழ். இந்நிய துணைத் தூதுவர் சாய் முரளி, விரிவுரையாளர்கள் மாணவர்கள் ஆகியோர் கலந்து கொண்டனர்.

(அ)

மன்னார் நகர சபை விவகாரம்;

# ஆளுநர் தனது வர்த்தமானியை மீளப்பெற்றதால் வழக்கு முடிவு!

மன்னார், ஜூன். 04

மன்னார் நகர சபை விவகாரத்தில் வடக்கு மாகாண ஆளுநரால் வெளியிடப்பட்ட அதிவிசேட வர்த்தமானி அறிவித்தல் முறைப்படி மீளப்பெறப்பட்டுள்ளது.

இதன் மூலம், ஆளுநரின் விசாரணைக்கு எதிராக தவிசாளரால் தாக்கல் செய்யப்பட்டிருந்த வழக்கு நேற்று முன் தினம் செவ்வாய்க்கிழமை முடிவுக்குக் கொண்டுவரப்பட்டுள்ளது.

வடக்கு மாகாண மேல் நீதிமன்றத்தின் யாழ்ப்பாண அமர்வில் இந்த எழுத்தாணை முறையீடு நேற்று முன் தினம் விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது. இதன்போது, ஆளுநர் சார்பில் முன்னிலையான அரச சட்டத்தரணி ஜனந்தன், தவிசாளருக்கு எதிராக வெளியிடப்பட்ட வர்த்தமானி அறிவிப்பில் தவறுகள் இருந்ததை நீதிமன்றில் ஒப்புக்கொண்டார். அந்த வர்த்தமானியையும் விசாரணை அறிவித்தலையும் ஆளுநர் கைவிடுவதாக அறிவித்ததை அடுத்து, நீதிபதி வழக்கை முடித்து வைத்தார்.

முன்னதாக, தவிசாளருக்கு எதிராக விசாரணை நடத்த நீதிமன்றம் இடைக்காலத் தடை விதித்திருந்த நிலையில், இந்த இறுதி முடிவு எட்டப்பட்டுள்ளது.

தவிசாளர் தரப்பில் மூத்த சட்டத்தரணி கலாநிதி கு.குருபரன் ஆஜராகியிருந்தார்.

(அ)

# லிட்ரோ எரிவாயுவின் விலை திருத்தம் இன்று

கொழும்பு, ஜூன். 04

லிட்ரோ எரிவாயு நிறுவனத்தின் இந்த ஜூன் மாதத்திற்கான எரிவாயு விலை திருத்தம் இன்று உத்தியோகபூர்வமாக அறிவிக்கப்பட்டு, எதிர்வரும் ஜூன் மாதம் ஐந்தாம் திகதி முதல் அமுலுக்கு வரவுள்ளதாக அந்நிறுவனம் அறிவித்துள்ளது.

உலக சந்தையின் தற்போதைய விலை நிலவரங்கள் மற்றும் சர்வதேச எரிவாயு விலைப் போக்குகளின் அடிப்படையிலேயே இந்த விலைத் திருத்தம் மேற்கொள்ளப்படவுள்ளடன், இது தொடர்பான அறிக்கைகள் நிதி அமைச்சிடம் சமர்ப்பிக்கப்பட்டு இறுதி மதிப்பீடுகள் பெற்றுக்கொள்ளப்பட வுள்ளதாக லிட்ரோ நிறுவனத்தின் ஊடகப் பேச்சாளர் தெரிவித்துள்ளார்

இதேவேளை, எதிர்வரும் ஜூன் மாதம் 30ஆம் திகதி நீர் கட்டணங்களில் திருத்தம் அவசியமா என்பது குறித்து மீளாய்வு செய்யப்படவுள்ளதாக வீடமைப்பு, நிர்மாணத்துறை மற்றும் நீர்வழங்கல் அமைச்சர் [illegible] தெரிவித்துள்ளார்.

# எம்பிலிப்பிட்டிய ஆடை தொழிற்சாலையில் தீ!

## 15 பேர் காயம்

கொழும்பு, ஜூன். 04

எம்பிலிப்பிட்டியில் உள்ள ஆடைத் தொழிற்சாலை ஒன்றில் ஏற்பட்ட தீப்பரவலில் 15 பேர் காயமடைந்துள்ளனர்.

நேற்றுக் காலை இந் தீப்பரவல் ஏற்பட்டதாக தெரிவிக்கப் படுகின்றது.

தீப்பரவலை கட்டுப்படுத்தும் பணிகளில் தீயணைப்பு படையினர் ஈடுபட்டனர்.

சம்பவத்தில் காயமடைந்த 15 பேர் எம்பிலிப்பிட்டிய வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வருகின்றனர்.

தீப்பரவலுக்கான காரணம் இதுவரை கண்டறியப்படவில்லை.

(அ)




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஈழநாடு
Eelanadu
04.06.2026 வியாழக்கிழமை
பராபவ வருடம், வைகாசி 21

**“ஏசுவார்கள், எரிப்பார்கள், அஞ்சவேண்டாம்
உண்மையை எழுதுங்கள்; உண்மையாய் எழுதுங்கள்”**
- யோகர் சுவாமிகள்.

**E-mail: eelanaduweekly@gmail.com**

## மனோ கணேசன் எந்த உலகத்தில் வாழ்கிறார்?

பல வருடங்களாக தாமதிக்கப்படும் மாகாணசபை தேர்தல்கள் விடயத்தில் இந்தியா தலையீடு செய்யக்கூடாது. தலையீடு செய்தால் அது இந்தியாவுக்கோ அல்லது எமக்கோ எந்த நன்மையையும் தராது.

“இந்தியா தமிழர்களுக்கு ஆதரவான ஒரு அரசாக இல்லாமல், முழு இலங்கைக்கும் ஆதரவளிக்கின்ற ஒரு அரசாகவே கருதப்பட வேண்டும். இந்த விடயத்தில் இந்திய அரசுக்கு ஒரு தார்மீக பொறுப்பு இருக்கிறது. இலங்கையில் தமிழர்களின் ஆயுதப் போராட்டத்தை வலுவிழக்கச் செய்ததில் இந்திய இந்திய இராஜதந்திரமும் இராணுவத் தலையீடும் ஒரு தீர்க்கமான பங்கை வகித்த காரணத்தினாலேயே அந்த பொறுப்பு.

இந்தியாவின் பணி நிறைவடையாமலேயே இன்னமும் இருக்கிறது. என்றாலும் இலங்கையில் அதன் நடவடிக்கைகளின்போது சுமார் 2 ஆயிரம் படை வீரர்களை இந்தியா இழந்தது. அதற்கு முதல் தமிழ்ப் போராளிக் குழுக்கள் இந்தியாவில் ஆயுதப் பயிற்சிகளைப் பெற்றன. அதன் விளைவாக இந்திய தொடர்பு இலங்கையில் சிங்களவர்கள் மத்தியிலும் தமிழர்கள் மத்தியிலும் உணர்ச்சிபூர்வமான ஒரு விவகாரமாக மாறியது.

நடந்து முடிந்தவை எவையாக இருந்தாலும், தேசியப் பிரச்சினை இலங்கையில் எமக்குள் தீர்த்துவைக்கப்பட வேண்டும். இலங்கைக்கு உள்ளேயே தீர்வு காணப்பட வேண்டும். இது விடயத்தில் எமக்கு மேற்குலகின் தலையீடும் தேவையில்லை. அண்மைக் காலமாக நாம் இந்திய பிரதமர், வெளியுறவு அமைச்சர் உட்பட இந்திய தலைவர்களை நாம் சந்தித்து வந்திருக்கிறோம். மிகவும் அண்மையில் இந்திய துணை ஜனாதிபதியையும் சந்தித்துப் பேசினோம். எமது அந்த சந்திப்புக்களின்போது அரசியலமைப்புக்கான 13 வது திருத்தத்தை அல்லது மாகாண சபைகளைப் பற்றி நாம் ஒருபோதும் பேசவில்லை.

13 வது திருத்தத்தையும், மாகாண சபைகளையும் தொடர்ந்து வைத்திருப்பதா, மேம்படுத்துவதா, முழுமையாக நடைமுறைப்படுத்துவதா அல்லது இரத்துச் செய்வதா என்பதை தீர்மானிப்பது இலங்கையர்களைப் பொறுத்தது. இணக்க பூர்வமான அரசியல் தீர்வொன்றைக் காண்பதற்கு இலங்கையில் பதவியில் இருந்த அரசாங்கங்களுடன் இந்தியா கொண்டிருந்த நல்லெண்ணத்தையும் செல்வாக்கையும் பயன்படுத்துவதற்கு வடக்கு, கிழக்கு மாகாணங்களை பிரதிநிதித்துவப் படுத்தியோர் தவறிவிட்டனர்.

“மாகாணசபை கட்டமைப்பை பயன்படுத்தி தங்களது அரசியல் நிலையை வலுப்படுத்தி மேம்படுத்தத் தவறியதன் மூலம் இலங்கை அரசாங்கங்களினதும் இந்தியாவினதும் நம்பிக்கையை வடக்கு, கிழக்கை பிரதிநிதித்துவப்படுத்துவோர் இழந்துவிட்டனர். இனப்பிரச்சினையை இந்தியாவுடனான இரு தரப்பு உறவுகளில் இருந்து வேறுபடுத்தி வைத்திருக்க வேண்டும் என்கிற அதேவேளை, இரு நாடுகளுக்குமே பயனுடையாதாக அமையக்கூடிய முறையில் பரஸ்பர நம்பிக்கையினதும் ஒத்துழைப்பினதும் அடிப்படையில் பொருளாதாரப் பிணைப்பை ஆழமாக்க வேண்டும்.”

கொழும்பு ஆங்கிலத் தினசரி. ஒன்று தமிழ் முற்போக்கு கூட்டணியின் தலைவரும் பாராளுமன்ற உறுப்பினருமான மனோ கணேசனிடம் “நீண்ட காலமாக தாமதிக்கப்பட்டுவரும் மாகாணசபை தேர்தல்களை விரைவாக நடத்துவதற்கு தேசிய மக்கள் சக்தி அரசாங்கத்துக்கு நெருக்குதலைக் கொடுக்க வேண்டும் என்று தமிழ் முற்போக்கு கூட்டணி இந்தியாவைக் கேட்குமா என்று கேட்டபோது அவர் அளித்த பதில் இது.

1983 கறுப்பு ஜூலைக்கு பிறகு இனப் பிரச்சினையில் இந்தியா செய்த தலையீட்டின் விளைவாகவே மாகாண சபைகள் முறைமை அறிமுகப்படுத்தப்பட்டது என்பதும் 1987 இந்திய - இலங்கை சமாதான உடன்படிக்கை கைச்சாத்திடப்பட்டதற்கு பின்னரான சுமார் நாற்பது வருடங்களில் பதவியில் இருந்த அரசாங்கங்கள் அந்த முறைமையை விட்டு வைத்திருப்பதற்கு இந்தியத் தலையீட்டின் விளைவாக அது வந்ததே பிரதான காரணம் என்பதும் எல்லோருக்கும் தெரிந்த அரசியல் யதார்த்தம்.

இதைப் புரிந்து கொள்ளாதவர் போன்று மனோ கணேசன் இந்தியா மாகாண சபை தேர்தல்கள் விடயத்தில் தலையீடு செய்யக் கூடாது என்று கூறியிருப்பதை பார்க்கும்போது அவர் எந்த உலகத்தில் வாழ்கிறார் என்று கேட்காமல் இருக்க ஈழநாட்டினால் முடியவில்லை. இந்தியாவினதோ அல்லது எந்தவொரு நாட்டினதோ தலையீட்டை நாம் வலியுறுத்துவதாக இதை அர்த்தப்படுத்த வேண்டியதில்லை ஆனால், உள்நாட்டில் நாங்களே எங்களுக்குள் பேசி உருப்படியான தீர்வை காண்பது அல்லது குறைந்த பட்சம் மாகாண சபைகளையாவது காப்பாற்றுவது என்றைக்காவது சாத்தியமாகுமா என்று மனோ கணேசனைக் கேட்கவிரும்புகிறோம்.

## பொய்களும் அரசியலும்

இலங்கையில் கடுமையாக உழைக்கும் அரசியல்வாதிகளைப் புறந்தள்ளிவிட்டு, பொய் சொல்வதில் வல்லவர்களாக இருக்கும் அரசியல்வாதிகளே வெற்றியடைகிறார்கள் என்று எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச வருத்தம் தெரிவித்திருப்பதாக கூறப்படுகிறது. தன்னை ஒரு கடின உழைப்பாளியாகக் காட்டிக்கொள்ளும் எந்தவொரு வாய்ப்பையும் அவர் தவறவிடுவதில்லை என்பதால், அவருடைய இந்த ஆதங்கம் சுய விளம்பரத்தைக் குறிப்பதாக அவரது அரசியல் எதிரிகள் வாதிடலாம்.

இருப்பினும், அவரது இந்த வாதம் முற்றிலும் நிராகரிக்கத்தக்கது அல்ல. கடந்த சில தசாப்தங்களாக, மாக்கியாவல்லி, கோயபல்ஸ் மற்றும் “கேட்போரைக் கண்விழிக்க வைக்கும் அளவுக்கு பயங்கரமான பொய்களைக்” கூறிய “மடில்டா” ஆகியோரையே மிஞ்சும் அளவுக்கு, பல அரசியல் தலைவர்கள் உதிர்த்த எண்ணற்ற பொய்களை நாம் கேட்டிருக்கிறோம்.

தேர்தல் முடிந்ததும் மக்கள் பிரசாரப் பொய்களை மறந்து விடுவதால் எதிர்க்கட்சிகள் தப்பித்துக் கொள்கின்றன.

இலங்கை அரசியலில் பொய் என்பது ஒரு பகுதி ஆகிவிட்டது. ஆட்சியில் இல்லாத அரசியல்வாதிகள் அளிக்கும் பொய் வாக்குறுதிகளும் பொய்களாகவே கருதப்பட வேண்டும், ஏனெனில் அவை மக்களை ஏமாற்றும் நோக்கத்தைக் கொண்டவை ஆகும். 2024 தேர்தலுக்கு முன்னர் ஜே.வி.பி / தேசிய மக்கள் சக்தி அரசியல்வாதிகள் அளித்த அல்லது அவர்களின் தேர்தல் அறிக்கையில் இடம் பெற்றிருந்த பொய் வாக்குறுதிகளே, தற்போதைய அரசாங்கத்தின் பொய்கள் என பொதுவாக விவரிக்கப்படுகின்றன.

கடன் மறுசீரமைப்பு செய்யப்பட்ட விதத்தை தாங்கள் எதிர்ப்பதாகவும் ஆட்சிக்கு வந்தால் முன்னைய அரசாங்கத்திற்கும் சர்வதேச நாணய நிதியத்திற்கும் இடையில் கையெழுத்தான பிணை எடுப்பு ஒப்பந்தத்தை மீண்டும் பேச்சுவார்த்தைக்கு உட்படுத்துவோம் என்றும் ஜே.வி.பி / தேசிய மக்கள் சக்தி தலைவர்கள் கூறியது பொதுமக்களை ஏமாற்றுவதற்காகவே என்பது இப்போது தெளிவாகியுள்ளது.

ஆனால், அரசாங்கத்தை அமைத்த பின்னர் அவர்கள் அந்த ஒப்பந்தத்தை அப்படியே வைத்திருக்க முடிவு செய்தனர், அது புத்திசாலித்தனமான ஒரு முடிவும் கூட. சஜித் பிரேமதாசவின் ஐக்கிய மக்கள் சக்தியும் சர்வதேச நாணய நிதியத் திட்டம் குறித்து இதையேதான் கூறி வந்தது, ஒருவேளை அவர்களால் அரசாங்கத்தை அமைக்க முடிந்திருந்தால் அவர்களது பொய்யும் அம்பலமாகியிருக்கும்.

அரசாங்கத்திற்கு சவால் விடுப்பதற்காக ஒன்றிணைந்துள்ள சில எதிர்க்கட்சிகள், தற்போதைய எரிசக்தி நெருக்கடியை தாங்கள் வேறு வழியில் கையாண்டிருப்போம் என்றும் எரிபொருள் மீதான வரிகளைக் குறைத்து மக்களுக்கு நிவாரணம் வழங்கியிருப்போம் என்றும் கூறுகின்றன. மக்களின் ஆதரவைப் பெறுவதற்காக தங்களது அரசியல் எதிரிகள் பொய் கூறுவதாகக் குற்றம் சாட்டும் அரசாங்கம், எரிபொருள் விலையைக் குறைப்பதற்கு வழியே இல்லை என்று திட்டவட்டமாகக் கூறுகிறது.

அது சர்வதேச நாணய நிதியத்தின் கட்டுப்பாடுகளுக்குள் சிக்கியிருப்பதால், அதன் நிபந்தனைகளை நிறைவேற்ற வேண்டும் அல்லது அதன் உதவியை இழக்க நேரிடும். அரசாங்கத்தின் வருவாயை அதிகரிக்க வேண்டும். எரிசக்தி விலைகள் உற்பத்திச் செலவை பிரதிபலிப்பதாக இருப்பதை உறுதி செய்ய வேண்டும் என்று ஜே.வி.பி/ ஐக்கிய மக்கள் சக்தி கூறுகிறது.

எனவே, செலவுகளை ஈடுகட்டவே எரிபொருள் விலையை உயர்த்த வேண்டியுள்ளது என்ற அரசாங்கத்தின் கூற்றை எதிர்க்கட்சிகள் பொய்யாக்க வேண்டுமானால், அதற்கான விரிவான செலவுப் பட்டியலைப் பெற்று, எரிபொருள் விலையானது உற்பத்திச் செலவை விட மிக அதிகமாக இருப்பதை நிரூபிக்க வேண்டும்.

மக்களுக்காகக் முதலைக் கண்ணீர் வடிக்கும் எதிர்க்கட்சி அரசியல்வாதிகள், அரசாங்கம் எரிபொருள் விலையை ஏன் உயர்த்துகிறது என்பதற்கான உண்மைகளையும் புள்ளி விவரங்களையும் சமர்ப்பிக்க வேண்டும். மோசடியான முறையில் கொள்முதல் செய்யப்பட்ட தரம் குறைந்த நிலக்கரியால் நுரைச்சோலை மின் உற்பத்தி நிலையத்தில் ஏற்பட்ட இழப்பை ஈடுகட்ட, எண்ணெய் மூலம் இயங்கும் மின் உற்பத்தி நிலையங்களை இயக்குவதற்காக வாங்கப்பட்ட கூடுதல் டீசல் இருப்புகளுக்கான செலவை ஈடுகட்டவே அரசாங்கம் எரிபொருள் விலையை உயர்த்துகிறது என்ற தங்களது குற்றச்சாட்டை அவர்கள் ஆதாரங்களுடன் நிரூபிக்க வேண்டும்.

வெறும் வெற்றுப் பேச்சுக்கள் மட்டும் போதாது. எரிபொருள் விலைகள் எவ்வாறு தீர்மானிக்கப்படுகின்றன என்பதை வெளிப்படுத்துமாறு அரசாங்கத்திற்கு அழுத்தம் கொடுக்க எதிர்க்கட்சிக்கு உள்ள சிறந்த தளம் பாராளுமன்றமேயாகும். இதற்கிடையில், ஐக்கிய மக்கள் சக்தியின் பேச்சாளர் ஒருவர் கூறிய கருத்து, பொருளாதாரத்தை வலுப்படுத்துவதற்காக ஜே.வி.பி/தேசிய மக்கள் சக்தி அரசாங்கம் சரியான பாதையில் செல்லவில்லை என்ற எதிர்க்கட்சியின் குற்றச்சாட்டு தவறானது என்பதை கவனக்குறைவாக ஒப்புக்கொண்டதாக சில தரப்பினரால் கருதப்படுகிறது.

பொருளாதாரத்தை சீரமைப்பதற்காக பல்வேறு சிக்கலான பிரச்சினைகளை எதிர்கொண்டு தத்தளிக்கும் ஜே.வி.பி / தேசிய மக்கள் சக்தி அரசாங்கத்தை, ஹபுத்தளையின் செங்குத்தான மலையில் பாரம் ஏற்றிய வண்டியை இழுத்துச் செல்லும் எருதுகளுக்கு ஒப்பிட்டுப் பேசிய ஐக்கிய மக்கள் சக்தியின் பாராளுமன்ற உறுப்பினர் முஜிபுர் ரஹ்மான், அந்தப் பணி முடியும் வரை ஆட்சியைப் பிடிக்க தனது கட்சி காத்திருப்பதாகக் கூறியுள்ளார்.

ஜே.வி.பி தலைமையிலான நிர்வாகமே தற்போதைய பொருளாதாரப் பிரச்சினைகளைக் கையாள விடுவது நல்லது, ஏனெனில் ஜே.வி.பி/தேசிய மக்கள் சக்தி ஆட்சியை இழந்த பிறகு, எதிர்கால அரசாங்கம் அதைச் செய்ய ஒருபோதும் அனுமதிக்காது என்றும் அவர் கூறியுள்ளார். தனது கட்சி அரசாங்கத்தை விட புத்திசாலி என்று காட்ட அவர் முயன்றிருக்கலாம், ஆனால் மறைமுகப் பாராட்டாக நினைத்துக் கூறியது அரசாங்கத்திற்கான பாராட்டுதலாக மாறியதோடு, எதிர்க்கட்சியின் நயவஞ்சகத்தனத்தையும் அம்பலப்படுத்தியுள்ளது.

அவரது கூற்றிலிருந்து நாம் அறிந்துகொள்வது என்னவென்றால், தற்போதைய பொருளாதார மீட்புத் திட்டத்தை விமர்சித்துக் கொண்டே, ஜே.வி.பி/ தேசிய மக்கள் சக்தி அரசாங்கத்தின் உழைப்பின் பலனை அனுபவிக்க ஐக்கிய மக்கள் சக்தி காத்திருக்கிறது என்பதாகும். வேறு வார்த்தைகளில் கூறுவதானால், பொருளாதாரத்தை வலுப்படுத்த அரசாங்கம் தேவையானதைச் செய்கிறது என்பதை ஐக்கிய மக்கள் சக்தி அறிந்துள்ளது. அவர்கள் தங்களைக் கூறிக் கொள்வது போன்று தேசப்பற்றுடையவர்களாக இருந்தால், தங்களது அரசியல் நிகழ்ச்சி நிரலைத் தள்ளிவைத்து விட்டு, தேசிய நலனுக்காக பொருளாதாரத்தை வலுப்படுத்த உதவ வேண்டும்.

(தி ஐலண்ட், ஆசிரிய தலையங்கம்,3 ஜூன் 2026)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




**மேடம்**
இதுவரை இருந்த அலைச்சல் நீங்கும். குடும்பத்தாரின் ஆதரவு பெருகும். பணப்புழக்கம் கணிசமாக உயரும். உத்தியோகத்தில் பணிகளை விரைந்து முடிப்பீர்கள். மாற்றம் ஏற்படும் நாள்.

**இடபம்**
சந்திராஷ்டமம் இருப்பதால் சில முக்கிய அலுவல்களை மற்றவர்களை நம்பி ஒப்படைக்காமல் நீங்களே செய்து முடிக்கப் பாருங்கள். உத்தியோகத்தில் உங்கள் பெயர் கெடாமல் பார்த்துக் கொள்ளுங்கள்.

**மிதுனம்**
உங்களின் பலம் பலவீனத்தை உணர்வீர்கள். சகோதர வகையில் உதவிகள் கிடைக்கும். உத்தியோகத்தில் சக ஊழியர்களின் ஆதரவால் நினைத்ததை முடிப்பீர்கள். தன்னம்பிக்கை துளிர்விடும்.

**கடகம்**
எதிர்பாராத பணவரவு உண்டு. உறவினர்கள் நண்பர்கள் ஆதரவாகப் பேசத் தொடங்குவார்கள். உத்தியோகத்தில் சில புதுமைகளை செய்து கவனத்தையும் ஈர்ப்பீர்கள். திடீர் யோகம் கிட்டும்.

**சிம்மம்**
புதிய திட்டங்களை தீட்டுவீர்கள். பிள்ளைகளின் உத்தியோகம் உயர் கல்வி பற்றி யோசிப்பீர்கள். உத்தியோகத்தில் சக ஊழியர்களின் ஒத்துழைப்பு அதிகரிக்கும். சிந்தனை திறன் வெளிப்படும்.

**கன்னி**
பழைய பிரச்னைகளுக்கு சுமூக தீர்வு காண்பீர்கள். மகளுக்கு நல்ல வரன் அமையும். வியாபாரத்தில் புது பங்குதாரரை சேர்ப்பீர்கள். உத்தியோகத்தில் திருப்தி உண்டாகும். உழைப்பால் உயரும் நாள்.

**துலாம்**
கம்பீரமாக பேசி சில காரியங்களை முடிப்பீர்கள். வாகனத்தை சீர் செய்வீர்கள். வியாபாரத்தில் அதிரடியான திட்டங்களை தீட்டுவீர்கள். உத்தியோகத்தில் நெருக்கமாவீர்கள். தைரியம் கூடும் நாள்.

**விருட்சிகம்**
கடந்த இரண்டு நாட்களாக கணவன்- மனைவிக்குள் இருந்து வந்த பிரச்னைகள் நீங்கி மகிழ்ச்சி அதிகரிக்கும். வியாபாரத்தில் இழந்ததை மீட்பீர்கள். உத்தியோகத்தில் மதிப்பு அதிகரிக்கும்.

**தனுசு**
ராசிக்கு சந்திரன் இருப்பதாலும் ஓய்வின்றி உழைக்க வேண்டி இருக்கும். மன இறுக்கங்கள் உருவாகும். வியாபாரத்தில் புது முதலீடுகளை தவிர்க்கவும். மறைமுக நெருக்கடிகள் வந்து நீங்கும்.

**மகரம்**
எளிதாக முடிய வேண்டிய விஷயங்கள் கூட பல முறை போராடி முடிப்பீர்கள். பிள்ளைகளின் உணர்வுகளை புரிந்து கொள்ளுங்கள். புதுமைகளைச் செய்து எல்லோரின் கவனத்தையும் ஈர்ப்பீர்கள்.

**கும்பம்**
கோபத்தை கட்டுப்படுத்தி உயர்வதற்கான வழியை யோசிப்பீர்கள். வியாபாரத்தில் வேலையாட்கள் கடமையுணர்வுடன் செயல்படுவார்கள். உத்தியோகத்தில் உங்கள் திறமை வெளிப்படும்.

**மீனம்**
உற்சாகமாக எதையும் முன்னின்று செய்வீர்கள். பிள்ளைகளால் மதிப்பு கூடும். வியாபாரத்தில் பழைய வாடிக்கையாளர்கள் தேடி வருவார்கள். உத்தியோகத்தில் முடிவுகள் எடுப்பீர்கள். சாதிக்கும் நாள்.

# தேசிய மட்டத்தில் வெற்றி பெற்ற சாதனை மாணவர்கள் கௌரவிப்பு

யாழ்ப்பாணம், ஜூன். 04

கல்வி, உயர்கல்வி அமைச்சும் ரவர் மண்டப திரையரங்க அமைப்பினரும் இணைந்து அகில இலங்கை ரீதியாக நடைபெற்ற தேசியமட்ட இசை நாடக போட்டியில் (சத்தியவான் சாவித்திரி) தெல்லிப்பளை யூனியன் கல்லூரி இரண்டாவது இடம் பெற்று சாதனை படைத்துள்ளது.

இதில் பங்கெடுத்த அதிபர், ஆசிரியர்கள் மற்றும் மாணவர்களுக்கும் கல்லூரி சமுகத்தால் கல்லூரி மண்டபத்தில் மதிப்பளிக்கப்பட்டனர்.

இந்நிகழ்வு கல்லூரி அதிபர் தி.வரதன் தலைமையில் சிறப்பாக நடைபெற்றது.



விருந்தினர்களாக வலிகாம வலய நாடகத்துறை உதவிக் கல்விப் பணிப்பாளர் ஏ.விஜயநாதனும், பழைய மாணவரும் ஓய்வுநிலை உதவிக் கல்விப் பணிப்பாளருமான எஸ்.கிருபானந்தாவும் கலந்து சிறப்பித்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

# யாழ். பொது நூலகத்துக்கு இந்தியத் தூதுவர் விஜயம்



யாழ்ப்பாணம், ஜூன். 04

இந்திய தூதுவர் சந்தோஷ் ஜா உள்ளிட்ட இந்திய தூதரக உத்தியோகத்தர்கள் குழு நேற்று முன் தினம் யாழ்ப்பாண பொது நூலகத்துக்கு விஜயம் செய்தது.

இதன்போது அப்துல் கலாமின் உருவச் சிலைக்கு மலர் அஞ்சலி செலுத்தி இந்திய தூதுவர் நூல்களை அன்பளிப்பாக வழங்கினர்.

இந்த நிகழ்வில் யாழ் மாநகர சபை முதல்வர் மற்றும் மாநகர சபை உறுப்பினர்களுடன் யாழ். மாநகர சபை ஆணையாளர், பிரதம நூலகர், பிரதம உதவி நூலகர் கலந்து சிறப்பித்தனர். (அ)

# உழவியந்திரம் ஏறியதில் இளைஞர் உயிரிழப்பு!

வவுனியா, ஜூன். 04

கனகராயன்குளம் பொலிஸ் பிரிவிற்குட்பட்ட குருசுட்டிக்குளம் பகுதியில் டிரக்டர் (உழவியந்திரம்) விபத்தில் சிக்கி 20 வயது இளைஞர் ஒருவர் உயிரிழந்துள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

விபத்தையடுத்து படுகாயமடைந்த குறித்த இளைஞர் புளியங்குளம் வைத்தியசாலையில் சேர்க்கப்பட்ட பின்னர் சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள்ளார்.

குருசுட்டிக்குளம் ஆலயத்துக்குச் சொந்தமான காணியை துப்புரவு செய்வதற்காக அந்த இளைஞர் டிராக்டரைச் செலுத்தியுள்ளதாக முதற்கட்ட விசாரணைகளில் தெரியவந்துள்ளது.

இதன்போது, டிராக்டரை ஸ்டார்ட் செய்ய முற்பட்டபோது அதில் ஒரு இயந்திரக் கோளாறு ஏற்பட்டுள்ளதாக நம்பப்படுகிறது.

அதனை பழுதுபார்க்க முயன்றபோது, டிராக்டர் எதிர்பாராத விதமாக முன்னோக்கி நகர்ந்ததால், அதன் சக்கரம் ஏறி குறித்த இளைஞர் நசுங்கியுள்ளார்.

இவ்விபத்தில் உயிரிழந்தவர் குருசுட்டிக்குளம் பகுதியைச் சேர்ந்த 20 வயதுடைய இளைஞர் என அடையாளம் காணப்பட்டுள்ளார்.

இச்சம்பவம் தொடர்பில் கனகராயன்குளம் பொலிஸார் மேலதிக விசாரணைகளை ஆரம்பித்துள்ளனர். (அ)

# பொன் சிவகுமாரன் நினைவேந்தல் வெள்ளிக்கிழமை காலை 8 மணிக்கு

யாழ்ப்பாணம், ஜூன். 04

விடுதலைப் போராட்டத்தின் முதல் வித்தான பொன் சிவகுமாரனின் 52 ஆவது நினைவேந்தல் நிகழ்வுகள் நாளை வெள்ளிக்கிழமை காலை 8 மணிக்கு வலிகாமம் கிழக்கு பிரதேச சபையினால் உத்தியோகபூர்வமாக அனுஷ்டிக்கப்படவுள்ளதாக வலிகாமம் கிழக்கு பிரதேச சபை அறிவித்துள்ளது.

உரும்பிராய் சந்தியில் உள்ள சிவகுமாரனின் நினைவிடத்தில் ஈகைச்சுடரேற்றி அனுஷ்டிக்கப்படவுள்ளது.

அதற்கான ஏற்பாடுகள் வலிகாமம் கிழக்கு பிரதேச சபையினால் மேற்கொள்ளப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

வலிகாமம் கிழக்கு பிரதேச சபை இவ் நினைவேந்தல் நிகழ்வை உத்தியோகபூர்வமாக தொடர்ந்து அனுஷ்டித்து வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

இவ் நினைவேந்தலில் அனைத்து தரப்பினரும் பங்கேற்க வேண்டும் என பிரதேச சபை அழைப்பு விடுத்துள்ளது. (அ)

# கிளிநொச்சி செல்வாநகர் வித்தியாலய பரிசளிப்பு

கிளிநொச்சி, ஜூன். 04

கிளிநொச்சி செல்வாநகர் வித்தியாலய பரிசளிப்பு நிகழ்வு நேற்று முன் தினம் சிறப்பாக இடம்பெற்றது.

பாடசாலை முதல்வர் சி.மகேந்திரராஜா தலைமையில் நடைபெற்ற நிகழ்வில் முதன்மை விருந்தினராக மாவட்ட அரசாங்க அதிபர் எஸ்.முரளிதரன் கலந்து கொண்டார்.

இதன்போது கல்வி, விளையாட்டு துறைகளில் சாதித்த மாணவர்களுக்கு மதிப்பளிக்கப்பட்டது.

சிறப்பு விருந்தினர்களாக மின் அத்தியட்சகர் இ.ரகுலேந்திரா, ஆசிரியர் வாண்மை விருத்தி முகாமை யாளர் ஆ.கேசவானந்தமூர்த்தி ஆகியோர் கலந்து கொண்டனர்.

நிகழ்வில் கௌரவ விருந்தினர்களாக செல்வாநகர் முத்துமாரி அம்மன் ஆலய குரு சிவசிறீ விபுலானந்த குருக்கள், உருத்திரபுரம் பங்குத்தந்தை ஜோன் கனிசியஸ் அடிகளார் உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.

# பருத்தித்துறையில் நடேசனுக்கு அஞ்சலி

யாழ்ப்பாணம், ஜூன். 04

சமூக மாற்றத்திற்கான ஊடக மையத்தின் ஏற்பாட்டில் பருத்தித்துறை பகுதியில் ஊடகவியலாளர் நடேசனுக்கான நினைவேந்தல் நிகழ்வு முன்னெடுக்கப்பட்டது.

இதன்போது ஈகச்சுடர் ஏற்றப்பட்டு மலர் மாலை அணிவிக்கப்பட்டு மலரஞ்சலி செலுத்தப்பட்டு நினைவேந்தல் நிகழ்வு அனுஷ்டிக்கப்பட்டது.

தொடர்ந்து நினைவுரைகள் நிகழ்த்தப்பட்டன.

இந்நிகழ்வில் பருத்தித்துறை நகர சபை உப தவிசாளர் இந்திரன், நகர சபை உறுப்பினர் ஜெயானந்தம் ஜெயகோபி, காணி உரிமைக்கான மக்கள் இயக்க தலைவர் இ.முரளிதரன் உட்பட அரசியல், சமூக செயற்பாட்டாளர்கள், ஜனநாயகப் போராளிகள் கட்சியின் முக்கியஸ்தர்கள் குடத்தனை வடக்கு கிராம அபிவிருத்தி சங்க தலைவர், சமூக மாற்றத்திற்கான ஊடகவியலாளர்கள் என பலர் கலந்து கொண்டனர். (அ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எரிபொருள் விலை உயர்ந்தபோதும் கூட்டுத்தாபனத்துக்கு பாரிய நட்டம்!

## அதன் தலைவர் அவசர எச்சரிக்கை

கொழும்பு, ஜூன் 04

அண்மையில் எரிபொருள் விலைகள் அதிகரிக்கப்பட்ட போதிலும், விற்கப்படும் ஒவ்வொரு லீற்றர் எரிபொருளிலிருந்தும் இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனம் இன்னும் கணிசமான நிதி நட்டத்தை எதிர்கொண்டு வருவதாக அதன் தலைவர் டி.ஜே.ராஜகருண தெரிவித்துள்ளார்.

உலக சந்தையில் எரிபொருள் விலைகள் கடுமையாக உயர்ந்துள்ள போதிலும், அரசாங்கம் பெருமளவிலான மானியங்களை வழங்கிப் பொதுமக்களைப் பாதுகாத்து வந்ததாகக் குறிப்பிட்ட அவர், எனினும் இந்த மானியங்களுக்காக ஒதுக்கப்பட்ட நிதி தற்போது வேகமாகத் தீர்ந்து வருவதாக எச்சரித்துள்ளார்.

ஒரு லீற்றர் டீசலுக்கு 100 ரூபாவும், ஒரு லீற்றர் பெற்றோலுக்கு 20 ரூபாவும் மானியமாக வழங்குவதற்காக அரசாங்கம் 57 பில்லியன் ரூபா என்ற பெரும் தொகையை ஒதுக்கியிருந்தது. இந்த நிதி நிவாரணமானது கடந்த ஏப்ரல் மற்றும் மே மாதங்களில் பேணப்பட்டதுடன், இந்த ஜூன் மாதத்திலும் தொடரும் என அவர் குறிப்பிட்டார்.

எனினும், இதற்கென ஒதுக்கப்பட்ட நிதி இந்த ஜூன் மாத இறுதியுடன் முழுமையாகத் தீர்ந்துபோகவுள்ளதால், நாட்டின் பொருளாதாரத்தில் மேலும் ஸ்திரமற்ற நிலை ஏற்படுவதைத் தடுப்பதற்காகவே அரசாங்கம் எரிபொருள் விலைகளை அதிகரிக்க நிர்பந்திக்கப்பட்டது என அவர் விளக்கமளித்துள்ளார்.

எரிபொருள் இறக்குமதிக்காக வெளிநாடுகளுக்குச் செல்லும் டொலர்களின் அளவு பாரியளவில் அதிகரித்துள்ளமை இந்நெருக்கடியை மேலும் தீவிரப்படுத்தியுள்ளது. முன்னைய மாதங்களில் மாதமொன்றுக்கு 100 மில்லியன் முதல் 120 மில்லியன் டொலர் வரை மட்டுமே காணப்பட்ட எரிபொருள் இறக்குமதிச் செலவு, கடந்த மாதத்தில் 522 மில்லியன் டொலர்களாகக் கடுமையாக உயர்ந்துள்ளது.

இந்த அசாத்திய டொலர் வெளியேற்றம் வெளிநாட்டு நாணய மாற்றுச் சந்தையை கடுமையாகப் பாதித்துள்ளது எனத் தலைவர் எச்சரித்துள்ளார்.

இந்த நிலை தொடருமானால், அது எரிபொருள் விலையை மட்டுமன்றி, நாட்டின் அனைத்துப் பொருள்கள் மற்றும் சேவைகளின் விலைகளிலும் சங்கிலித் தொடர் விளைவை ஏற்படுத்திப் பொருளாதாரத்தைப் பேரழிவிற்கு உள்ளாக்கும் என எச்சரித்துள்ள அவர், எரிபொருள் நுகர்வை விவேகமான முறையில் குறைத்துக் கொள்ளுமாறு பொதுமக்களிடம் கேட்டுக் கொண்டார்.

(அ)

# நடப்புச் சிறுபோகத்தில் 75 வீதமான வயல்களுக்கு உர மானியம் வழங்கல்

கொழும்பு, ஜூன். 04

நடப்புச் சிறுபோகத்தில் நெற்செய்கை பண்ணப்பட்டுள்ள வயல் நிலங்களில் 75 வீதமான நிலப்பரப்பிற்குத் தேவையான உர மானியத்திற்கான பணக் கொடுப்பனவுகள் ஏற்கனவே வழங்கப்பட்டுள்ளதாக விவசாய அபிவிருத்தித் திணைக்களம் தெரிவித்துள்ளது.

இதற்காக 8 ஆயிரத்து 990 மில்லியன் ரூபாய் செலவிடப்பட்டுள்ளதாக அதன் பணிப்பாளர் நாயகம் தம்மிக ரணதுங்க குறிப்பிட்டார்.

மேலும் 2000 மில்லியன் ரூபாய் இந்த வாரத்திற்குள் விவசாயிகளின் வங்கிப் கணக்குகளில் வைப்பிலிடப்படவுள்ளதுடன், இந்த உர மானியத்தின் கீழ் விவசாயி ஒருவருக்கு 30000 ரூபாய் வீதம் வழங்கப்படுகின்றது

இந்தச் சிறுபோகத்தில் 3 இலட்சத்து 94 ஆயிரத்து 299 ஹெக்ரேயர் நிலப்பரப்பில் நெற்செய்கை பண்ணப்பட்டுள்ளதாக மதிப்பிடப்பட்டுள்ளதுடன், விவசாய அபிவிருத்தி நிலையங்கள் ஊடாக ஒரு மூட்டை யூரியா உரம் 10ஆயிரத்து 200 ரூபாய் என்ற விலையில் விவசாயிகளுக்குத் தொடர்ந்து விநியோகிக்கப்பட்டு வருகின்றது.

இதேவேளை, யூரியா மற்றும் எம்ஓபி உரங்களை ஏற்றிய மேலும் இரண்டு கப்பல்கள் இந்த மாதத்தில் நாட்டை வந்தடையவுள்ளதாக தேசிய உரச் செயலகம் தெரிவித்துள்ளது.

(அ)

# நான்கு சந்தேகநபர்களிடம் 19 கைத்துப்பாக்கிகள் மீட்பு

கொழும்பு, ஜூன் 04

தெமட்டகொட பகுதியில், கைத்துப்பாக்கிகளுடன் நான்கு சந்தேக நபர்கள் மேல் மாகாண வடக்கு குற்றப்பிரிவு அதிகாரிகளால் கைது செய்யப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

கைது செய்யப்பட்ட சந்தேக நபர்களிடமிருந்து 19 கைத்துப்பாக்கிகள் கைப்பற்றப்பட்டுள்ளன.

சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன.

(அ)

# 13 சீனப் பிரஜைகள் கைது!

கொழும்பு, ஜூன் 04

சட்டவிரோதமான முறையில் நாட்டுக்குள் கொண்டுவரப்பட்ட, இரண்டு கோடியே 84 இலட்சத்து 40 ஆயிரம் ரூபா பெறுமதியான வெளிநாட்டு சிகரெட்டுகளுடன் 13 வெளிநாட்டுப் பயணிகள் கட்டுநாயக்க விமான நிலையத்தில் சுங்க அதிகாரிகளால் கைது செய்யப்பட்டனர்.

கைது செய்யப்பட்ட அனைவரும் 28 முதல் 45 வயதுக்கு இடைப்பட்ட சீன நாட்டு பிரஜைகள் என விமான நிலைய சுங்கப் பிரிவு தெரிவித்துள்ளது.

இவர்கள் நேற்று முன் தினம் அதிகாலை 01.10 மணியளவில் தாய்லாந்தின் பாங்கொக் நகரிலிருந்து தாய் ஏயர் ஏசியா மற்றும் பாடிக் ஏயர் ஆகிய விமான சேவைகளுக்குச் சொந்தமான விமானங்கள் மூலம் கட்டுநாயக்க விமான நிலையத்தை வந்தடைந்துள்ளனர்.

அதன்பின்னர், விமான நிலையத்தின் வருகை முனையத்தின் கிரீன் சேனல் வழியாக குறித்த சிகரெட் தொகையை கொண்டு செல்ல முயன்ற போதே இவர்கள் சுங்க அதிகாரிகளால் பிடிக்கப்பட்டனர்.

சந்தேக நபர்கள் கொண்டு வந்த 22 பயணப் பொதிகளில் மறைத்து வைக்கப்பட்டிருந்த சீன தயாரிப்பு சிகரெட்டுகள் அடங்கிய 948 கார்டூன்கள் சுங்க அதிகாரிகளால் கைப்பற்றப்பட்டன. இவற்றில் மொத்தம் ஒரு இலட்சத்து 89 ஆயிரத்து 600 சிகரெட்டுகள் இருந்ததாக மதிப்பிடப்பட்டுள்ளது.

(அ)

# தனது குழந்தையை கிணற்றில் வீசிய தாய் எல்பிட்டிய பொலிஸாரால் கைது!

கொழும்பு, ஜூன். 04

தனது இரண்டரை மாதமேயான பெண் குழந்தையை கிணற்றில் வீசியதாகக் கூறப்படும் தாய் ஒருவர், எல்பிட்டிய - கஹதுவ, துடுவேகொட பகுதியில் வைத்து சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்டுள்ளதாக எல்பிட்டிய பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

சந்தேக நபரான தாய், குழந்தையை கிணற்றில் வீசிய பின்னர், "நான் மகளை கிணற்றில் போட்டுவிட்டேன்" என்று கூறிச் சத்தமிட்டுள்ளார்.

அந்த சத்தத்தைக் கேட்டு உடனடியாக செயற்பட்ட அவரது கணவர், கிணற்றில் மிதந்து கொண்டிருந்த தனது மகளை மீட்டுள்ளார்.

பின்னர், அயலவர்களின் உதவியுடன் குழந்தை உடனடியாக வைத்தியசாலையில் அனுமதிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. இதன் காரணமாகவே குழந்தையின் உயிரைக் காப்பாற்ற முடிந்ததாக பொலிஸார் குறிப்பிட்டுள்ளனர்.

குழந்தை வீசப்பட்ட கிணறு ஆழமற்ற ஒன்றாக இருந்தமையும் குறித்த குழந்தையின் உயிரை காப்பாற்ற பிரதான காரணியாக அமைந்துள்ளது.

தற்போது வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ள குழந்தையின் ஆரோக்கிய நிலைமை கவலைக்கிடமாக இல்லை என எல்பிட்டிய பொலிஸார் மேலும் கூறினர்.

(அ)




Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

### கல்லடி புனர்வாழ்வு நிலையத்தில்

# போதை பொருளுக்கு அடிமையாகி சிகிச்சை பெற்ற 30 பேர் உறவினர்களிடம் ஒப்படைப்பு!

மட்டக்கலப்பு, ஜூன். 04

மட்டக்களப்பு கல்லடி பொலிஸ் பயிற்சி கல்லூரி வளாகத்தில் உள்ள போதை பொருளுக்கு அடிமையானவர்களுக்கு புனர்வாழ்வு நிலையத்தில் 14 நாள்கள் சிகிச்சை அளிக்கப்பட்ட 30 பேர் நேற்று முன் தினம் நற்சான்றிதழ்களை வழங்கி உறவினர்களிடம் சம்பிரதாய பூர்வமாக ஒப்படைக்கும் நிகழ்வு இடம்பெற்றது.

பொதுமக்கள் பாதுகாப்பு மற்றும் பாராளுமன்ற விவகார அமைச்சின் கீழ் தேசிய அபாயகர ஔடதங்கள் கட்டுப்பாட்டுச் சபையினால் போதை பொருளுக்கு அடிமையானவர்களுக்கான புனர்வாழ்வு இடைத்தங்கல் நிலையம் கடந்த மே மாதம் 20ஆம் திகதி திறந்து வைக்கப்பட்டு அதில் முதல் கட்டமாக 30 பேர் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டனர்.

இதில் சிகிச்சையை வெற்றிகரமாக முடித்துக் கொண்ட 30 பேரையும் சமூகத்தில் இணைக்க உறவினர்களிடம் ஒப்படைக்கும் நிகழ்வு நேற்று முன் தினம் புனர்வாழ்வு நிலையத்தின் பொறுப்பதிகாரியும் தேசிய அபாயகர ஔடதங்கள் கட்டுப்பாட்டுச் சபையின் மாவட்ட இணைப்பாளர் ப. டினேஸ் தலைமையில் இடம்பெற்றது.

இந்த நிகழ்வில் அதிதிகளாக மாவட்ட சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் லலித் லீலாரத்தின, தேசிய அபாயகர ஔடதங்கள் கட்டுப்பாட்டுச் சபையின் வடக்கு -கிழக்கு இணைப்பாளர் எம்.எம்.ஜி.பி.எம்.ரசாக், உதவி பொலிஸ் அத்தியட்சகர் ஜூஸ், மட்டு பிராந்திய சுகாதார சேவைகள் பிரதிப் பணிப்பாளர் வைத்தியர் கே.மோகனகுமார், உளநல வைத்தியர் டான், உட்பட்ட அதிகாரிகள் கலந்து கொண்டு 14 நாள்கள் தங்கியிருந்து சிகிச்சை பெற்ற 30 பேருக்கும் நற்சான்றிதழ் வழங்கினர்.

# 14 வயதுடைய இளம் பிக்கு தேரரால் துஷ்பிரயோகம்!

### அம்பாறை மாவட்டத்தில் சம்பவம்

அம்பாறை, ஜூன். 04

14 வயதுடைய இளம் பௌத்த பிக்குவை தொடர்ச்சியாக துஷ்பிரயோகம் மேற்கொண்டு தலைமறைவாகி இருந்த 41 வயதுடைய பௌத்த தேரரை மத்திய முகாம் பொலிஸார் கைது செய்துள்ளனர்.

அம்பாறை மாவட்டம் மத்திய முகாம் பொலிஸ் பிரிவிற்குட்பட்ட சுகந்த கம பகுதியில் அமைந்துள்ள விகாரையில் கடந்த செவ்வாய்க்கிழமை மாலை இச்சம்பவம் இடம்பெற்றுள்ளது.

இதன்போது விகாரையில் தங்கி இருந்த 5 இளம் பிக்குகளில் 3 இளம் பிக்குகள் அண்மையில் தப்பிச் சென்ற சம்பவம் தொடர்பில் அறிந்த ஊர் மக்கள் விகாரையை நோக்கி ஆர்ப்பாட்டம் ஒன்றை மேற்கொள்ளத் தயாரானவேளை குறித்த விடயம் வெளிச்சத்துக்கு வந்துள்ளது.

மேலும் 2 இளம் பிக்குகள் பொலிஸாரினால் வாக்குமூலம் பெறுவதற்காக விகாரையில் இருந்து அழைத்துச் சென்ற நிலையில் குறித்த சந்தேக நபரான 41 வயது பௌத்த தேரர் தீகவாவி பிரதேசத்துக்கு தப்பி சென்றிருந்தார்.

பின்னர் மற்றுமொரு பௌத்த பிக்கு சகிதம் 41 வயதுடைய பௌத்த தேரர் தீகவாபி பகுதியில் இருந்து மத்திய முகாம் பொலிஸாரிடம் சரண் அடைந்ததைத் தொடர்ந்து கைது செய் யப்பட்டார்.

(அ)

# மாணவர்களுக்கு போதை மாத்திரை விற்பனை செய்துவந்த இருவர் கைது!

அம்பாறை, ஜூன். 04

நீதிமன்றத்தினால் பிடியாணை பிறப்பிக்கப்பட்டு நீண்ட நாட்களாகத் தலைமறைவாக இருந்த முக்கிய குற்றவாளி உட்பட இருவரை, ஹெரோயின் மற்றும் போதை மாத்திரைகளுடன் சம்மாந்துறை பொலிஸார் கைது செய்துள்ளனர்.

நேற்று முன் தினம் இரவு அம்பாறை மாவட்டம் சம்மாந்துறை பொலிஸ் பிரிவிற்குட்பட்ட இரு வேறு இடங்களில் சம்மாந்துறை பொலிஸ் நிலைய ஊழல் ஒழிப்பு பிரிவினருக்குக் கிடைத்த இரகசிய தகவலின் பேரில் இந்தச் சோதனைகள் நடத்தப்பட்டன.

நீதிமன்றப் பிடியாணையில் இருந்து தப்பிக்கத் தலைமறைவாக இருந்த 36 வயதுடைய சந்தேக நபர், ஹெரோயின் போதைப் பொருளைத் தன்வசம் வைத்திருப்பதாகப் பொலிஸாருக்குத் தகவல் கிடைத்தது.

பொலிஸார் அச்சந்தேக நபரை முதன்முறையாகக் கைது செய்யச் சென்றபோது, அவர் பொலிஸ் அதிகாரிகள் மீது தாக்குதல் நடத்திவிட்டு அவர்களின் பிடியில் இருந்து தப்பியோடினார்.

எனினும், பொலிஸார் நீண்ட தேடுதல் வேட்டைக்குப் பிறகு மீண்டும் அவரை மடக்கிப் பிடித்தனர்.

இந்த மோதலின் போது, சம்மாந்துறை பொலிஸ் நிலைய ஊழல் ஒழிப்பு பிரிவின் பொறுப்பதிகாரி என். றிபாய்டீன் இடது காலில் காயமடைந்ததுடன், அவருடன் சென்ற மற்றுமொரு பொலிஸ் உத்தியோகத்தரும் காயமடைந்துள்ளார்.

இதேவேளை, அதே இரவில் நடத்தப்பட்ட மற்றொரு சோதனையில், நீண்ட காலமாகப் பாடசாலை மாணவர்கள் மற்றும் பல்கலைக்கழக மாணவர்களைக் குறிவைத்து மிகவும் சூட்சுமமான முறையில் போதை மாத்திரைகளை விநியோகித்து வந்த 25 வயதுடைய மற்றொரு சந்தேக நபரும் பொலிஸாரால் கைது செய்யப்பட்டார். (அ)

# சென்னையில் இலங்கைப் பெண் கொலை சம்பவத்தில் படுகாயமுற்ற சிறுமியும் பலி!

சென்னை, ஜூன். 04

சென்னை கோயம்பேட்டில் உள்ள கேளிக்கை விடுதிக்கு வெளியே ஏற்பட்ட மோதலில், மோட்டார் சைக்கிள் மீது கார் ஏற்றி இலங்கைப் பெண் கொலை செய்யப்பட்ட சம்பவத்தில், படுகாயமடைந்து சிகிச்சை பெற்று வந்த 17 வயதுச் சிறுமியும் பரிதாபமாக உயிரிழந்துள்ளார்.

இதன் மூலம் இந்த சம்பவத்தில் உயிரிழந்தவர்களின் எண்ணிக்கை இரண்டாக உயர்ந்துள்ளது.

விழுப்புரம் மாவட்டத்தில் உள்ள இலங்கை அகதிகள் முகாமில் வசித்து வந்தவர் 18 வயதான யான்சி என்ற இளம்பெண். இவர் இன்ஸ்டாகிராம் சமூக வலைத்தளம் மூலமாகச் சென்னையைச் சேர்ந்த பெண் ஒருவருடன் தோழமையாகப் பழகி வந்துள்ளார்.

தனது தோழியைப் பார்ப்பதற்காக சென்னை சென்ற யான்சி, இரவு நேரத்தில் கோயம்பேட்டில் உள்ள ஒரு கேளிக்கை விடுதிக்கு சென்றுள்ளார்.

அங்கு அவருக்கும் மற்றொரு தரப்பினருக்கும் இடையே திடீரென கடுமையான வாக்குவாதம் மற்றும் முரண்பாடு ஏற்பட்டுள்ளது.

இதனைத் தொடர்ந்து, இரு தரப்பினரையும் விடுதியின் பாதுகாவலர்கள் அங்கிருந்து வெளியேற்றியுள்ளனர்.

விடுதியை விட்டு வெளியேறிய பின்னர் யான்சி மற்றும் அவருடன் வந்த 17 வயதுச் சிறுமி ஆகிய இருவரும் மோட்டார் சைக்கிளில் புறப்பட்டுள்ளனர்.

இதன்போது , அவர்களுடன் முரண்பாட்டில் ஈடுபட்ட பாலகுரு மற்றும் சுமன் சக்திவேல் உள்ளிட்ட குழுவினர், தங்களது காரால் இவர்களின் மோட்டார் சைக்கிள் மீது வேகமாக மோதி விபத்தை ஏற்படுத்தியுள்ளனர்.

இந்த விபத்தில் பலத்த காயமடைந்த இலங்கை அகதிப் பெண் யான்சி சம்பவ இடத்திலேயே பரிதாபமாக உயிரிழந்தார்.

மோட்டார் சைக்கிளில் அவருடன் பயணித்த 17 வயதுச் சிறுமி படுகாயமடைந்த நிலையில் மீட்கப்பட்டு, சென்னை கீழ்பாக்கம் அரசு மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டார்.

அங்கு சுயநினைவற்ற நிலையில் தீவிர சிகிச்சை பிரிவில் அனுமதிக்கப்பட்டிருந்த அந்தச் சிறுமியும், சிகிச்சை பலனின்றி தற்போது உயிரிழந்துள்ளதாக இந்திய ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

இச்சம்பவம் குறித்து வழக்குப் பதிவு செய்த கோயம்பேடு பொலிஸார் மேற்கொண்ட தீவிர தேடுதல் நடவடிக்கையில், இந்த இரட்டைக் கொலையில் தொடர்புடைய முக்கிய குற்றவாளியான பாலகுரு, அவருடைய நண்பர் சுமன் சக்திவேல் உட்பட 7 பேரைக் கைது செய்துள்ளனர்.

(அ)

# கடந்த ஒரு மாதத்தில் 360 இற்கும் மேற்பட்ட இணையவழி நிதி மோசடிச் சம்பவங்கள்!

கொழும்பு, ஜூன். 04

கடந்த ஒரு மாதத்தில் இணையவழி நிதி மோசடி தொடர்பான 360க்கும் மேற்பட்ட சம்பவங்கள் பதிவாகியுள்ளதாக இலங்கை கணினி அவசர தயார்நிலைக் குழு தெரிவித்துள்ளது.

இணையவழியில் நிதிப் பரிவர்த்தனைகளை மேற்கொள்ளும்போது பொதுமக்கள் மிகுந்த எச்சரிக்கையுடன் செயல்படவேண்டும் என்றும் குழுவின் முன்னணி தகவல் பாதுகாப்புப் பொறியாளர் சாருகா தமுனுபோலா குறிப்பிட்டார்.

அண்மைய வெசாக் மற்றும் போசன் பண்டிகைக் காலங்கள் உள்ளிட்ட பண்டிகைக் காலங்களில், இணையக் குற்றவாளிகள் நன்கு அறியப்பட்ட வர்த்தக முத்திரைகளைப் போல ஆள் மாறாட்டம் செய்யும் போலி விளம்பரங்களைப் பயன்படுத்தி நுகர்வோரை ஏமாற்றி, அவர்களின் முக்கியமான தனிப்பட்ட மற்றும் நிதித் தகவல்களைப் பெறுவது அதிகரித்து வருவதாகவும் அவர் குறிப்பிட்டார்.

எந்தவொரு இணையவழிப் பணப்பரிவர்த்தனையும் அதிகாரப்பூர்வமான மற்றும் முறையான இணையதளம் மூலமாக மட்டுமே செய்யப்படுகிறதா என்பதைப் பொதுமக்கள் சரிபார்க்க வேண்டும் என்று அவர் வலியுறுத்தினார். (அ)

# வேலோடுமலையில் 5 பாணலிங்கங்கள்!



அம்பாறை, ஜூன். 04

உலகப் புகழ்பெற்ற காசி மாநகரிலிருந்து பக்திப்பூர்வமாகக் கொண்டுவரப்பட்ட, மிகவும் புனிதமான ஐந்து பாணலிங்கங்கள் வேலோடுமலை முருகன் ஸ்தலத்திலே புனிதமான வைகாசி விசாக நன்னாளினில், முறைப்படி பிரதிஷ்டை செய்யப்பட்டுள்ளன.

அடியார்கள் திரளாகக் கலந்துகொண்ட இந்த ஆன்மீக வைப வம், வேலோடுமலைத் தலத்தில் ஆதீன கர்த்தா தியாக ராஜ சுவாமிகள் தலைமையில் மிகக் கோலாகலமாகவும் பக்திப் பரவசத்துடனும் அரங்கேறியுள்ளது.

வைகாசி விசாக நன்நாளில் சுக்ர ஹோரையில் வேலோடு மலை முருகன் ஆலயத்தில் அகத்தியர் பெருமானின் ஆணைப் பாடி ஜீவ நாடியில் உரைக்கப்பட்ட பஞ்ச சுயம்பு லிங்கங்களும் காசியில் இருந்து ஜானகி ராமன் மற்றும் கார்த்திக் சுவாமிகளால் கொண்டு வரப்பட்டு திருவண்ணாமலையில் 10 நாள்கள் பூஜிக்கப்பட்டு சுப முகூர்த்தத்தில் கோபிநாத் சுவாமிகள் மற்றும் சித்தர்கள் குரல் அமைப்பின் ஸ்தாபக தலைவர் சிவசங்கர் ஜீ முன்னிலையில் பிரதிஷ்டை செய்யப்பட்டது. (அ)

# குளவி கொட்டுக்கு இலக்காகி தோட்டத் தொழிலாளி மரணம்!

கொழும்பு, ஜூன். 04

கலஹா பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட, கித்துல்முல்ல மேல் பிரிவு தோட்டத்தில் குளவிக் கொட்டுக்கு இலக்காகி தோட்டத் தொழிலாளி ஒருவர் பலியாகியுள்ளார்.

கித்துல்முல்ல மேல் பிரிவு தோட்டத்தைச் சேர்ந்த 58 வயதான சந்திரசேன என்பவரே இவ்வாறு உயிரிழந்துள்ளார்.

இச்சம்பவம் நேற்று முன் தினம் இடம்பெற்றுள்ளது.

தேயிலை தோட்டத்தில் களை நாசினி தெளித்து கொண்டு இருந்த சந்தரப்த்தில் திடீரென குளவி குடு கலைந்து அங்கு இருந்த மூன்று பேருக்கு தாக்கியுள்ளது.

பாதிக்கப்பட்ட மூவரையும், கலஹா பிரதேச வைத்தியசாலைக்கு கொண்டுசெல்லும் வழியில் 58 வயது நபர் உயிரிழந்துள்ளார்.

ஏனைய இருவரும் கலஹா பிரதேச வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வருகின்றனர். (அ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தமிழரசு கட்சியின்...

மாவட்ட கிளைத் தலைவரான பெ.கனகசபாபதி, கூட்டத்துக்கு தான் வரமுடியாது உள்ளதாகவும், என்னைத் தலைமை தாங்கி நடத்துமாறும் கேட்டுமிருந்தார்.

கூட்டம் ஆரம்பமாவதற்கு முன் வயதையும் கருத்திற்கொண்டு மரியாதையின் நிமித்தமும் சி.வி.கே. சிவஞானத்தை தலைமை தாங்கி நடத்துமாறும் கேட்டுக்கொண்டேன்.

தலைமை தாங்க சம்மதித்த அவர், கூட்டம் ஆரம்பமானதும் எழுந்து நின்று கூட்டத்தை சுமந்திரன் நடத்துவார் என அறிவித்தார்.

எனக்கு அதிர்ச்சியாக இருந்தபோதிலும் கட்சி நலன் கருதி சமாளித்துக்கொண்டேன்.

தான் தலைமை தாங்காதுவிடின் என்னிடம்தான் கூறியிருக்கவேண்டும்.

நானே கூட்டத்தை நடத்தி முடித்து இருப்பேன்.

பின் கூட்டத்துக்கு தலைமை தாங்கிய சுமந்திரன் அறிவித்து, செயலாளர் தெரிவு இடம்பெற்றது.

தொடர்ந்து உடனேயே சிவஞானத்தை தானே பிரேரித்து, அந்த இடத்திலிருந்து தான் தலைமை தாங்குவதால், மாற்றுப் பிரேரணைக்கு இடமில்லை என்றும் எவரும் ஆமோதிக்கக்கூட தேவையில்லை என சுமந்திரன் தெரிவித்தபோது, சபையிலிருந்தவர்கள் அதனை ஆட்சேபித்தார்கள்.

நான் கடுமையாக எதிர்த்து மற்றவர்களின் கருத்துக்கும் இடமிருக்கவேண்டும் என வற்புறுத்தினேன்.

இது தொடர்பான கருத்துக்கள் தெரிவித்தவர்களை அடாத்தாக அமரச் செய்து, அவர்களது கருத்துக்களை மறுத்து, சிவஞானமே தலைவர் என அவர் அறிவித்தார்.

இதனை ஏற்காத நான், கட்சி நலன் கருதி அமைதியாக இருந்துவிட்டேன்.

மற்றவர்களின் கருத்துக்களுக்கும் ஆலோசனைகளுக்கும் இடமளிக்காமலே, சிவஞானத்தை தலைமை தாங்க அமர்த்தினார்.

இச் செயற்பாடு ஒருவராலும் ஏற்றுக்கொள்ள முடியாதது.

இலங்கைத் தமிழரசுக் கட்சியில் மட்டுமல்ல வேறெந்த அமைப்புகளிலும் கூட இம்மாதிரியான அடாவடிச் செயற்பாடுகள் இடம்பெற்றது இல்லை.

கட்சிக்கென்று ஒழுங்கு முறைகளும் நடைமுறைகளும் உள்ளன.

கட்சியின் 77 ஆண்டு கால வரலாற்றில் இடம்பெறாத சம்பவங்கள் எல்லாம் இப்போது திணிக்கப்படுகின்றன.

ஜனநாயக ரீதியான செற்பாடுகளில் கவனம் செலுத்த வேண்டுமென கூறுகின்ற அதேவேளை, அடாத்தும் சண்டித்தனமும் மேலோங்குவதாகத் தோன்றுகிறது.

கறையான் புற்றெடுக்கக் கொடிய நாகங்களும், விசயந்துக்களும் குடிகொண்டு சன்னதமாடுகின்ற நிலை போன்று, கட்சியை அந்த நிலைக்குத் தள்ளிவிட முடியாது.

எனவே இம்மாதிரியான தெரிவுகள் குறித்து கட்சி தீவிர கவனம் செலுத்தி தகுந்த தீர்வைக் காணாது விட்டால் சுயநலத்தாலும் பதவி மோகம் என்பதற்கு அப்பால் பதவி வெறியாலும், காழ்புணர்வுகளாலும் அடாவடித்தனங்கள் சண்டித்தனங்களாலும் பிரதேச வாதங்களாலும் நொருக்குண்டு பலவீனம் அடைந்திருக்கும் எம் கட்சியின் இன்றைய நிலை மேலும் மோசம் அடையும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்-என்று தெரிவித்துள்ளார். (அ)

## நாகபட்டினத்திலிருந்து...

முன்னர் காங்கேசன்துறையில் இருந்து நாகபட்டினம் நோக்கிப் பயணித்த நிலையில் அசாதாரண காலநிலை காரணமாக சேதமடைந்தது. இதனால் ஒரு சில வாரங்கள் பயணிகள் போக்குவரத்துச் சேவையில் ஈடுபடவில்லை.

அதனைத் தொடர்ந்து சிவகங்கை கப்பல் மீண்டும் நேற்று முதல் பயணிகள் போக்குவரத்தில் ஈடுபட ஆரம்பித்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (அ-05)

## காங்கேசன் துறை...

சிவகங்கை கப்பல் அதிகாரிகளுடனும், மாலுமிகளுடனும் கலந்துரையாடினார். அத்துடன் கப்பல் போக்குவரத்து குறித்து பயணிகளிடமும் கருத்துக்களை கேட்டறிந்தார். மேலும் கப்பலையும் பார்வையிட்டார்.

இதன்போது யாழ்ப்பாணம் இந்தியத் துணை தூதுவர் சாய் முரளி, கப்பல் நிறுவனத்தின் இலங்கைக்கான பணிப்பாளர் கே.எம்.ஜெயசீலன், கப்பல் நிறுவனத்தின் அதிகாரியான பகீரதன், கப்பல் நிறுவனத்தின் இந்தியாவுக்கான சந்தைப்படுத்தல் முகாமையாளர், கப்பல் நிறுவனத்தின் ஏனைய அதிகாரிகள், சுங்கத் துறை அதிகாரிகள் மற்றும் கடற்படை அதிகாரிகள் என பலரும் கலந்துகொண்டனர். (அ-05)

## கோட்டாவுக்கு...

விதித்துள்ளார்.

2019 உயிர்த்த ஞாயிறு பயங்கரவாதத் தாக்குதல்கள் தொடர்பான விசாரணையின் காரணமாக இந்த தடை உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

நீதிவான் பாசன் அமரசேன, இந்த உத்தரவை குடிவரவு மற்றும் குடியகல்வு கட்டுப்பாட்டாளருக்கு உடனடியாக அனுப்பி வைக்குமாறு நீதிமன்றப் பதிவாளருக்கு உத்தரவிட்டார்.

அரச புலனாய்வுச் சேவையின் முன்னாள் பணிப்பாளர் மற்றும் ஓய்வுபெற்ற மேஜர் ஜெனரல் சுரேஷ் சாலே சம்பந்தப்பட்ட வழக்கு நீதிமன்றத்தில் விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டபோது இந்த உத்தரவுகள் பிறப்பிக்கப்பட்டன.

இந்த நடவடிக்கைகளில் சுரேஷ் சாலே ஒரு சந்தேக நபராகப் பெயரிடப்பட்டுள்ளார். (அ)

# யாழ்.பல்கலை வெசாக் கூடு சேதம் நல்லிணக்கத்தை குலைக்க சதியா?

### விசாரணை தீவிவரம் என்கிறார் அமைச்சர்

கொழும்பு, ஜூன். 04

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் மாணவர்கள் இணைந்து உருவாக்கிய வெசாக் கூடு சேதமாக்கப்பட்ட சம்பவம் தொடர்பாகப் பொலிஸாரும் புலனாய்வுப் பிரிவினரும் தீவிர விசாரணைகளை முன்னெடுத்து வருவதாக அமைச்சரவைப் பேச்சாளர் அமைச்சர் நளிந்த ஜயதிஸ்ஸ தெரிவித்தார்.

இச்சம்பவம் குறித்து அமைச்சரவை தீர்மானங்களை அறிவிக்கும் ஊடகவியலாளர் மாநாட்டில் எழுப்பப்பட்ட கேள்விக்கு பதிலளிக்கும் போதே இதனைத் குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

இந்தச் சம்பவம் தொடர்பாகப் பொலிஸார் இதுவரை எமக்கு உத்தியோகபூர்வமாக எந்தவொரு அறிக்கையையும் சமர்ப்பிக்கவில்லை.

எனினும், சமூக ஊடகங்கள் வாயிலாக அறியமுடிந்த வரை, யாழ்ப்பாணப் பல்கலைக்கழக மாணவர் சங்கத்தைப் பிரதிநிதித்துவப்படுத்தும் தமிழ் மாணவர்களே இந்த வெசாக் கூட்டை மிகவும் அர்ப்பணிப்புடன் உருவாக்கியுள்ளனர்.

எனவே, இந்த நல்லிணக்க முயற்சியைச் சீர்குலைப்பதற்காக ஏதேனும் ஒரு தரப்பினரால் திட்டமிட்டு நடத்தப்பட்ட சதிச் செயலா இது என்பது குறித்துப் பொலிஸாரும் புலனாய்வுப் பிரிவினரும் இணைந்து பல கோணங்களில் விசாரணைகளை நடத்தி வருகின்றனர் - என்றார்.

# நீதித்துறை சுதந்திரத்துக்கு கடுமையான அச்சுறுத்தல்!

### அரசின் புதிய முன்மொழிவை சாடுகிறது ஐக்கிய மக்கள் சக்தி

கொழும்பு, ஜூன். 04

மேன்முறையீட்டு நீதிமன்றம் மற்றும் உயர் நீதிமன்ற நீதியரசர்களின் ஓய்வு பெறும் வயதை அதிகரிப்பதற்கு அரசாங்கம் மேற்கொண்டு வரும் முயற்சிகளுக்கு ஐக்கிய மக்கள் சக்தி தனது கடுமையான எதிர்ப்பை வெளியிட்டுள்ளது.

அரசாங்கத்தின் இத்தகைய நடவடிக்கை அரசியலமைப்புக் முரணானது என்றும், அது நீதித்துறையின் சுதந்திரத்தைப் பாரதூரமாகப் பாதிக்கும் என்றும் அக்கட்சி விடுத்துள்ள விசேட அறிக்கையில் எச்சரித்துள்ளது.

உயர் நீதிமன்ற நீதியரசர்களின் ஓய்வு பெறும் வயது அரசியலமைப்பின் மூலம் வரையறுக்கப்பட்டுள்ளதால், அதில் மாற்றங்களை மேற்கொள்வதாயின் அரசியலமைப்புத் திருத்தமொன்றின் ஊடாக மாத்திரமே அதனைச் செய்ய முடியும் என ஐக்கிய மக்கள் சக்தி சுட்டிக்காட்டியுள்ளது.

இந்த முன்மொழிவுக்கான எந்தவொரு தெளிவான காரணத்தையும் அரசாங்கம் இதுவரை முன்வைக்கவில்லை எனவும், இத்தகைய மர்மமான போக்கு பொதுமக்களிடையே பெரும் சந்தேகத்தை ஏற்படுத்தியுள்ளதாகவும் அந்த அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

புதிய அரசியலமைப்பொன்றை வரைந்து, அதனை பொதுஜன வாக்கெடுப்பு மூலம் மக்களிடம் சமர்ப்பிப்பதாக அரசாங்கம் தனது கொள்கை பிரகடனத்தில் உறுதியளித்திருந்த நிலையில், தற்போது அதற்கு முரணாக அரசியலமைப்புத் திருத்தங்களை மேற்கொள்ள முயல்வது முரண்பாடான செயல் என அந்த கட்சி சாடியுள்ளது.

நீதியரசர்களின் ஓய்வு பெறும் வயதை நீடிப்பதன் மூலம், தகுதியுடைய ஏனைய நீதிபதிகளின் பதவி உயர்வுகள் நியாயமற்ற முறையில் தாமதமாகும் என ஐக்கிய மக்கள் சக்தி தெரிவிப்பதோடு, இது மற்றவர்களின் உரிமைகள் மற்றும் சுதந்திரங்களை மதிக்குமாறு வலியுறுத்தும் அரசியலமைப்பின் 28ஆவது உறுப்புரையை மீறும் செயல் எனவும், சட்டத்தின் ஆட்சி மற்றும் நீதித்துறை சுதந்திரத்திற்கு விடுக்கப்படும் நேரடி சவால் எனவும் வாதாடியுள்ளது.

நீதித்துறையின் சுயாதீனத்தைப் பாதுகாப்பதில் அக்கறை கொண்ட அனைத்து நபர்கள், அமைப்புகள் மற்றும் அரசியல் கட்சிகள் ஒன்றிணைந்து இந்த நடவடிக்கைக்கு எதிராகத் தலையிட வேண்டும் என ஐக்கிய மக்கள் சக்தி அழைப்பு விடுத்துள்ளது. (அ)

## சூரியசக்தி மின்...

பார்வையிட்ட இந்திய தூதுவர், அங்கு இடம்பெறும் தற்போதைய செயல்பாடுகள் குறித்து அங்கிருந்த அதிகாரிகளுடன் விரிவாகக் கேட்டறிந்துகொண்டார்.

இந்திய தூதுவரின் இந்த விஜயத்தின்போது, வடக்கு மாகாண ஆளுநர் நா.வேதநாயகன், யாழ்ப்பாணத்திற்கான இந்திய துணைத் தூதுவர் சாய் முரளி மற்றும் இந்திய தூதரகத்தின் உயர் அதிகாரிகள், நெடுந்தீவு பிரதேச செயலாளர் ந.பிரபாகரன் என பலரும் உடன் இணைந்திருந்தனர். (அ)

## பொன் சிவகுமாரன்...

செய்யப்பட்டுள்ளது.

வலிகாமம் கிழக்கு பிரதேச சபையின் தீர்மானத்துக்கு அமைவாக உத்தியோகபூர்வமாக உணர்வுவெழுச்சியுடன் நினைவேந்தல் நிகழ்வுகள் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளன.

இந் நினைவேந்தலை ஏற்பாடு செய்துவரும் நிலையிலேயே வலிகாமம் கிழக்கு பிரதேச சபைத் தவிசாளர் தியாகராஜா நிரோஷ் கோப்பாய் பொலிஸாரினால் விசாரணைக்கு அழைக்கப்பட்டுள்ளார்.

நினைவேந்தல்களுக்கு தடையில்லை என அரசாங்கம் தெரிவித்து வருகின்றபோதும் செயலளவில் நினைவேந்தல் உரிமைகளைக்கூட அங்கீகரிக்காத போக்கே காணப்படுவதாக வலிகாமம் கிழக்கு பிரதேச சபை தவிசாளர் தியாகராஜா நிரோஷ் குற்றஞ்சாட்டியுள்ளார். (அ)

## நாணய நிதியத்திடம்...

ஸ்திரத்தன்மையையும், சந்தை நம்பிக்கையையும் மேலும் வலுப்படுத்துவதற்கு இந்த நிதியுதவி ஒரு குறிப்பிடத்தக்க பக்கபலமாக அமையும் என நிபுணர்கள் எதிர்பார்க்கின்றனர். (அ)

## பின்னால் வந்த கார்...

தெரிவிக்கின்றன.

உயிரிழந்த இரண்டு இளைஞர்களும் கனகராயன் குளம் பகுதியைச் சேர்ந்தவர்கள் என அடையாளம் காணப்பட்டுள்ளனர்.

இவர்களின் உடல்கள் பிரேத பரிசோதனைக்காக வவுனியா மாவட்ட பொது வைத்தியசாலைக்கு கொண்டு செல்லப்பட்டுள்ளன.

விபத்தை ஏற்படுத்திய கார் மற்றும் அதன் சாரதி தொடர்பில் கனகராயன்குளம் பொலிஸார் தீவிர விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

இந்த விபத்தில் உயிரிழந்தவர்களில் ஒருவர் யாழ். மாவட்ட முன்னாள் அரச அதிபர் இமெல்டா சுகுமாரின் மகனான தர்சன் (வயது-40) என அடையாளம் காணப்பட்டுள்ளார். (அ)

Digitized by Noolaham Foundation
noolaham.org | noolaham.media

ஈழநாடு
Eelanadu

# சந்தைத் தேவைக்கேற்ப அரிசி இறக்குமதி குறித்து பரிசீலனை

## கூட்டுறவு திணைக்களத்துக்கு 1,000 மில்லியன் ரூபா ஒதுக்கீடு

கொழும்பு, ஜூன். 04

நாட்டின் தேவைக்கேற்ப அரிசியை இறக்குமதி செய்வது குறித்து அரசாங்கம் பரிசீலித்து வருவதாக வர்த்தக, வணிக, உணவுப் பாதுகாப்பு மற்றும் கூட்டுறவு அபிவிருத்தி அமைச்சர் வசந்த சமரசிங்க தெரிவித்தார்.

வர்த்தக, வணிக, உணவுப் பாதுகாப்பு மற்றும் கூட்டுறவு அபிவிருத்தி அமைச்சின் பாராளுமன்ற ஆலோசனைக் குழுக் கூட்டத்தில் கலந்துகொண்டு உரையாற்றும் போதே அமைச்சர் இதனைக் குறிப்பிட்டார்.

இதன்படி, சந்தையிலுள்ள சம்பா மற்றும் கீரிச் சம்பா அரிசிகளுக்குப் மாற்றீடாகக் கடந்த ஏப்ரல் மாதத்தில் மாத்திரம் 120,000 மெற்றிக் தொன் அரிசி இறக்குமதி செய்யப்பட்டுள்ளதாக அவர் வெளிப்படுத்தினார்.

தேவையேற்பட்டால் மாத்திரமே அரிசி இறக்குமதி செய்வது குறித்து ஆராயப்படுமெனவும் அவர் தெரிவித்தார்.

நெல்லை அரிசியாக மாற்றுவதற்கும் உருளைக்கிழங்கைக் கொள்வனவு செய்வதற்கும் கூட்டுறவு மொத்த விற்பனைக் கூட்டுத்தாபனம் (சதொச) நேரடியாகத் தலையிட்டுள்ளதாக அமைச்சர் இக்கூட்டத்தொடரில் தெரிவித்துள்ளார்.

விவசாயிகளிடமிருந்து 1 கிலோ கிராம் உருளைக்கிழங்கை 220 ரூபா என்ற அடிப்படையில் கொள்வனவு செய்து, அவற்றைச் சதொச விற்பனை நிலையங்கள் ஊடாக நுகர்வோருக்கு நியாயமான விலையில் விற்பனை செய்யத் திட்டமிடப்பட்டுள்ளது.

நெல்லை உலர்த்துதல், களஞ்சியப்படுத்துதல் உள்ளிட்ட உள்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்துவதற்காகக் கூட்டுறவு மொத்த விற்பனைக் கூட்டுத்தாபனம் ஊடாக 1,000 மில்லியன் ரூபா நிதி ஒதுக்கப்பட்டுள்ளதாக இக்கூட்டத்தின்போது தெரியவந்துள்ளது. (அ)

# நிதி அமைச்சில் 2.5 மில்லியன் டொலர் மோசடி; தனிப்பட்ட அறிக்கையை நிராகரித்தார் ஹர்ஷ

கொழும்பு, ஜூன். 04

நிதியமைச்சுக்குச் சொந்தமான 2.5 மில்லியன் அமெரிக்க டொலர் மோசடியாகப் பரிமாற்றம் செய்யப்பட்டதாகக் கூறப்படும் சம்பவம் தொடர்பான அறிக்கை, தனக்குத் தனிப்பட்ட முறையில் அனுப்பி வைக்கப்பட்டதை, அரசாங்க நிதி பற்றிய குழுவின் தலைவர் பாராளுமன்ற உறுப்பினர் ஹர்ஷ டி சில்வா நிராகரித்துள்ளார்.

அத்துடன், இந்த அறிக்கையை குழுவின் பரிசீலனைக்காக பாராளுமன்றத்தின் ஊடாக உத்தியோகபூர்வமாக சமர்ப்பிக்குமாறு அவர் வலியுறுத்தியுள்ளார்.

முன்னதாக, இந்த நிதிப் பரிமாற்றம் தொடர்பான விரிவான அறிக்கை மற்றும் அனைத்து ஆவணங்களையும் சமர்ப்பிக்குமாறு நிதியமைச்சின் செயலாளரிடம் அரசாங்க நிதி பற்றிய குழு முன்னதாகக் கோரியிருந்தது. இதற்கு அமைச்சுக்கு நான்கு வார கால அவகாசமும் வழங்கப்பட்டிருந்தது.

இதனையடுத்து, அறிக்கை ஒன்று தயாரிக்கப்பட்டபோதிலும், அது ஹர்ஷ டி சில்வாவின் தனிப்பட்ட பார்வைக்காக அவருக்கு நேரடியாக அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

இந்த நிலையில், குறித்த அறிக்கை, அரசாங்க நிதி பற்றிய குழுவினால் கோரப்பட்டதே தவிர, தனது தனிப்பட்ட நலனுக்காக அல்ல என்பதால், இந்த நடவடிக்கையை ஏற்றுக்கொள்ள முடியாது என அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

நான் மக்களின் பிரதிநிதி, அத்துடன் தற்போது அரசாங்க நிதி பற்றிய குழுவின் தலைவராகப் பணியாற்றுகிறேன். இந்த அறிக்கை குழுவினர் கூடி ஆராய்ந்து விவாதிப்பதற்கே கோரப்பட்டது, எனது தனிப்பட்ட பார்வைக்காக அல்ல" என அவர் தெரிவித்தார்.

இதற்கமைய, சம்பந்தப்பட்ட அதிகாரிகளை இந்த அறிக்கையை புதன்கிழமைக்குள் பாராளுமன்றத்தின் ஊடாகச் சமர்ப்பிக்குமாறு அரசாங்க நிதி பற்றிய குழு தற்போது உத்தரவிட்டுள்ளது.

அறிக்கை கிடைத்தவுடன், அதன் கண்டுபிடிப்புகளை உறுப்பினர்கள் ஆய்வு செய்த பின்னர், எதிர்காலக் கூட்டத்தில் இது குறித்து விவாதிக்கப்படும் என்று ஹர்ஷ டி சில்வா தெரிவித்தார். (அ)

# நீதித்துறை சுதந்திரத்தை பாதுகாக்கக் கோரி மனு!

## மேன்முறையீட்டு நீதிமன்றில் சிரேஷ்ட சட்டத்தரணிகள் தாக்கல்

கொழும்பு, ஜூன்.04

அதிகாரபூர்வ கடமைகளின் போது வழங்கப்பட்ட நீதித்துறை முடிவுகள் தொடர்பாக, பதவியிலிருக்கும் மேல் நீதிமன்ற நீதிபதி ஒருவரை அழைத்து விசாரிப்பதைத் தடுக்குமாறு கோரி மூன்று மூத்த சட்ட வல்லுநர்கள் மேன்முறையீட்டு நீதிமன்றத்தில் பேராணை மனு ஒன்றை தாக்கல் செய்துள்ளனர்.

இத்தகைய நடவடிக்கை நீதித்துறை சுதந்திரத்துக்கும் சட்டத்தின் ஆட்சிக்கும் கடுமையான அச்சுறுத்தலை ஏற்படுத்தும் என்று அவர்கள் வாதிட்டுள்ளனர்.

ஜனாதிபதி சட்டத்தரணி உதித்த எகலஹேவா, ஜனாதிபதி சட்டத்தரணி பேர்மான் காசிம் மற்றும் சிரேஷ்ட சட்டத்தரணி சுகத் கல்தேரா ஆகியோரால் இந்த மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

இந்த மனுவில் கொழும்பு மேல் நீதிமன்ற நீதிபதி உதேஷ் ரணதுங்க, சட்டமா அதிபர் மற்றும் அவிசாவளை மேல் நீதிமன்ற நீதிபதி சஹான மாபா பண்டார ஆகியோர் எதிர்மனுதாரர்களாகக் குறிப்பிடப்பட்டுள்ளனர்.

இந்த மனு மேன்முறையீட்டு நீதிமன்றத் தலைவர் ரொஹந்த அபேசூரிய மற்றும் நீதியரசர் பிரியந்த கே. பெர்னாண்டோ ஆகியோர் முன்னிலையில் விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்ட போது, நீதிமன்றம் ஒரு முக்கிய இடைக்கால உத்தரவைப் பிறப்பித்தது.

இதன்படி, நீதிபதியை நேரில் முன்னிலையாகுமாறு கோரும் அழைப்பாணையுடன் தொடர்புடைய அனைத்து நடவடிக்கைகளுக்கும் தடை விதிக்கப்பட்டது.

அத்துடன், இந்த மனு மீதான இறுதித் தீர்மானம் எட்டப்படும் வரை நீதிபதியை நீதிமன்றில் முன்னிலையாகுமாறு கட்டாயப்படுத்துவதற்கு எவ்வித மேல் நடவடிக்கைகளையும் எடுக்கக் கூடாது என உத்தரவிடப்பட்டது.

மேலும், இது தொடர்பாக ஜூன் 12ஆம் திகதிக்குள் விளக்கமளிக்குமாறு எதிர்மனுதாரர்களுக்கு நீதிமன்றம் அறிவித்தலையும் அனுப்பியுள்ளது.

மனுவில் குறிப்பிட்டுள்ளபடி, கொழும்பு மேல் நீதிமன்றத்தில் நிலுவையிலுள்ள வழக்கு ஒன்றின் நிமித்தம் அவிசாவளை மேல் நீதிமன்ற நீதிபதி மாபா பண்டாரவுக்கு அழைப்பாணை அனுப்பப்பட்டிருந்தது.

அவர் நுகேகொடை மாவட்ட நீதிபதியாகப் பணியாற்றிய காலத்தில் பிறப்பித்த நீதித்துறை உத்தரவுகள் குறித்து அவரிடம் கேள்வி எழுப்புவதே இந்த அழைப்பாணையின் நோக்கம் என நம்புவதற்குத் தகுந்த காரணங்கள் இருப்பதாக மனுதாரர்கள் தெரிவித்துள்ளனர்.

2025 பெப்ரவரியில் தாக்கல் செய்யப்பட்ட அசல் குற்றப்பத்திரிகையில் சாட்சிகளின் பட்டியலில் நீதிபதி மாபா பண்டாரவின் பெயர் சேர்க்கப்படவில்லை.

2026, மார்ச்சில் தாக்கல் செய்யப்பட்ட கூடுதல் சாட்சிகள் பட்டியலிலேயே அவர் "நுகேகொடை மாவட்ட நீதிபதி" எனக் குறிப்பிடப்பட்டு சேர்க்கப்பட்டுள்ளார் என்றும் மனுதாரர்கள் சுட்டிக்காட்டியுள்ளனர்.

நீதித்துறை அதிகாரிகள் தங்களின் அதிகாரபூர்வ கடமைகளின் போது மேற்கொள்ளும் நீதித்துறை நடவடிக்கைகளுக்கு சட்டப் பாதுகாப்பு உண்டு.

இந்த நிலையில், நீதிபதிகள் தாங்கள் விசாரித்த வழக்குகள் மற்றும் வழங்கிய தீர்ப்புகளின் பின்னணி அல்லது நீதித்துறை விவேகம் குறித்து மற்றொரு நீதிமன்றத்தில் விசாரணைக்கு உட்படுத்த அனுமதிக்கப்பட்டால், அது நீதித்துறையின் சுதந்திரத்தைப் பாதிக்கும் செயல்களாக அமையும்.

அத்துடன் நீதி நிர்வாகத்தின் மீது பொதுமக்களுக்கு இருக்கும் நம்பிக்கையைக் குலைக்கும் என்றும் மனுவில் எச்சரிக்கப்பட்டுள்ளது. (அ)

# யாழ்.பல்கலை முகாமைத்துவ பீடத்துக்குள் முகத்தை மூடி மதில் பாய்ந்து வந்தவர்களே வெசாக் கூட்டை உடைத்தனர்!

யாழ்ப்பாணம், ஜூன். 04

யாழ்ப்பாண பல்கலைக்கழக முகாமைத்துவ பீடத்திற்குள் மதில் ஏறி பாய்ந்து , அத்துமீறி நுழைந்த நபர்களே வெசாக் கூட்டை சேதப்படுத்தினர். எனவே தேவையற்ற- விசமப் பிரசாரங்களை மேற்கொள்ளவேண்டாம் என முகாமைத்துவ கற்கைகள் வணிக பீடாதிபதி பேராசிரியர் என்.கெங்காதரன் கேட்டுள்ளார்.

யாழ்ப்பாணப் பல்கலைக்கழக முகாமைத்துவ கற்கைகள் வணிக பீடத்தில் அமைக்கப்பட்டிருந்த வெசாக் கூடு கடந்த 31 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை நள்ளிரவு இனந்தெரியாத நபர்களினால் சேதமாக்கப்பட்ட சம்பவம் தொடர்பில் முகாமைத்துவ கற்கைகள் வணிக பீடாதிபதி வெளியிட்டுள்ள செய்தி குறிப்பிலேயே அவ்வாறு குறிப்பிடப்பட்டுள்ளது.

அதில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளதாவது-

யாழ்ப்பாணப் பல்கலைக்கழக முகாமைத்துவ கற்கைகள் வணிக பீடத்தில் கல்வி பயிலும் சகல இன மாணவர்களும் ஒற்றுமையுடனும் சகோதரத்துவத்துடனுமே தமது கற்கைகளை மேற்கொண்டு வருகிறார்கள்.

ஒவ்வொருவருடைய இன - மத, சமய - சமூக பண்பாட்டு விழுமியங்களுக்கு மதிப்பளிக்கும் வகையில் அந்தந்தக் காலப்பகுதிகளில் அவரவர் கலாசார நிகழ்வுகளும் இடம் பெறுவது வழமையாகும்.

அந்த வகையில் கடந்த வார இறுதியில் பௌத்த மாணவர்களால் 30, 31 ஆம் திகதிகளில் வெசாக் நிகழ்வுகளை நடத்துவதற்கு முறையாக அனுமதி கோரப்பட்டிருந்தது.

சகல மதங்களுக்கும் சம மரியாதை அளிக்கும் வகையில் நிகழ்வுக்கு அனுமதி வழங்கப்பட்டிருந்தது. 30 ஆம் திகதி சனிக்கிழமை எந்தவித அசம்பாவிதங்களுமின்றி நிகழ்வுகள் நிறைவு பெற்றிருந்தன.

31 ஆம் திகதி இரவு வரை நிகழ்வுகள் அமைதியான முறையில் நடைபெற்று முடிந்த பின்னர் பின்னிரவு 10:50 மணியளவில் முகங்களைத் துணியால் மூடியபடி மதில் வழியாகப் பாய்ந்து உள் நுழைந்த இனந்தெரியாத இரண்டு பேர் பீடத்தில் அமைக்கப்பட்டிருந்த வெசாக் அலங்காரத்தை அடித்து சேதப்படுத்துவதை அவதானித்த கடமையிலிருந்த பாதுகாப்பு உத்தியோகத்தர்கள் அவர்களை நோக்கிச் செல்ல அவர்கள் மதில் பாய்ந்து தப்பிச் சென்றனர்.

அதன் பின்னர் மீண்டும் நள்ளிரவு 12:50 மணிக்கு மீளவும் மதில் வழியால் குதித்து உள் நுளைந்துள்ளனர். மீண்டும் அதனைக் கண்ணுற்ற பாதுகாப்பு உத்தியோகத்தர்கள் அவர்களை விரட்டிச் சென்றபோது அவர்கள் மதிலேறித் தப்பிச் சென்றுவிட்டனர்.

சம்பவம் தொடர்பில் அந்த நேரத்தில் பீடாதிபதிக்கு அறிவிக்கப்பட்டு உடனடியாகத் தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டன.

தற்போது பீடத்தில் வழமையான கற்கை நடவடிக்கைகள் ஒற்றுமையாக நடைபெறுகின்றது -என குறிப்பிடப்பட்டுள்ளது. (அ)

# சிவசிதம்பரத்தின் நினைவு நாளை

வடமராட்சி, ஜூன். 04

தமிழ்த் தலைவர்களில் ஒருவரும் முன்னாள் உப சபாயநாயகரும் முன்னாள் நல்லூர், உடுப்பிட்டித் தொகுதிகளின் பாராளுமன்ற உறுப்பினருமான அமரர் மு.சிவசிதம்பரத்தின் 24ஆவது நினைவு தினம் நாளை வெள்ளிக்கிழமை நெல்லியடி, கரவெட்டிப் பகுதிகளில் அனுஷ்டிக்கப்படவுள்ளது.

பிரதான நிகழ்வு அன்றைய தினம் காலை 8 மணிக்கு நெல்லியடி பஸ் நிலைய சதுக்கத்தில் அமைந்துள்ள அமரரின் உருவச்சிலைக்கு மலர் மாலை அணிவித்து அஞ்சலி செலுத்தும் நிகழ்வு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளதாக கரவெட்டி அபிவிருத்தி ஒன்றியத்தினால் அறிவிக்கப்பட்டுள்ளது.

காலை 9 மணியளவில் கரவெட்டி அத்துளுப் பகுதியில் உள்ள அமரர் சிவசிதம்பரத்தின் இல்லத்தில் அமைக்கப்பட்டுள்ள அன்னாரின் சிலைக்கு ஆதரவாளர்கள் அயலவர்கள் மாலை அணிவித்து அஞ்சலி செலுத்தும் நிகழ்வு எஸ். சிதம்பரநாதன் தலைமையில் நடைபெறவுள்ளது. (அ-02)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை 707, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரியில் அமைந்துள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் நிறுவனத்தினரால் 04.06.2026 அன்று ஏ9 வீதி, நாவற்குழியில் உள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது.